JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 06 | August 2024 | Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 | Single Copy ₹ 10



எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு,
உதாசீனப்படுத்தப்பட்ட சூழ்நிலையில்
இருக்கும் உங்களை;
தேவ திட்டத்தை நிறைவேற்ற
தெரிந்துகொள்வது தான்...

## தேவனின் தெரிந்தெடுப்பு!

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்ரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **youth.jesusredeems.com** என்ற **website** மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.




## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹ 10/-

ஆண்டு சந்தா ₹ 100/-

ஆயுள் சந்தா ₹ 1000/-

## 30,000 வாலிபர்கள்


கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிக்கை உங்கள் கையில் உள்ளதா?



உள்ளே...

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com





# தலைவாசல்

# உன்னை தெரிந்துகொண்டேன்!!

*எனக்கு மிகவும் பிரியமான வாலிப மகனே(ளே)!*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! இந்த வருடத்தில் 7 மாதங்களை கடந்து 8வது மாதத்தில் நம்மை பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. ஒவ்வொரு மாதமும் இந்த வாலிபர் உலகம் பத்திரிக்கையின் மூலம் கர்த்தர் உங்களை பலப்படுத்தி வருகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்த மாதம் தேவனுடைய தெரிந்தெடுப்பு எப்படிப்பட்டது என்று பார்க்கப் போகிறோம்.

தேவனுடைய தெரிந்தெடுப்பு எப்பொழுதும் பிரம்மிக்கத்தக்கது. அவர் சிறியவனை புழுதியில் இருந்து எடுத்து, எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனை ராஜாக்களோடும், பிரபுக்களோடும் உட்காரப் பண்ணுகிறார். அவர் ஆபேலை நேசித்து அவன் காணிக்கையை அங்கீகரித்தார்; ஆனால் காயீனின் பலியையோ அங்கீகரிக்கவில்லை. அவர் 'நான் யாக்கோபை நேசித்தேன், ஏசாவை வெறுத்தேன்' என்கிறார். தேவன் தெரிந்தெடுத்த அத்தனை நபர்களும் எளிமையானவர்கள், குறைவுள்ளவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், தள்ளப்பட்டவர்கள் தான். அவர்கள் வாழ்க்கையில் குறைவுகள் இருந்தாலும், தேவனை அளவில்லாமல் நேசித்து அவரை விசுவாசித்தார்கள்.

இப்படி உலகம் ஒன்றுக்கும் உதவாது என்று யார் யாரை தள்ளினதோ, கர்த்தர் அவர்களை மார்போடு அணைத்து, அவர்கள் வாழ்க்கையை மாற்றி புதியதோர் ஆரம்பத்தை கொடுக்கிறார். முழு உலகத்திற்கும் சுவிசேஷம் பரவி செல்ல இயேசு கிறிஸ்து 12 சீஷர்களை தேர்ந்தெடுத்தார். அவர்களை நம்பினார். அவர்கள் ஒவ்வொருவரும் அறிஞர்கள் அல்ல, ஆளுமை உள்ளவர்கள் அல்ல; சாதாரணமான மீன்பிடி தொழில் செய்கின்றவர்கள். ஆனால், அவர்கள் மேல் நம்பிக்கை வைத்து அவர்களை தெரிந்தெடுத்தார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி, தேவன் உலகத்தில் பைத்தியமானவர்களை தெரிந்து கொண்டார். பலம் உள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவர்களை தெரிந்து கொண்டார். அற்பமாக எண்ணப்பட்ட நம்மை தேவன் தெரிந்து கொண்டதால், 'என்னை தேவன் தெரிந்துகொண்டார்' என்று நாம் பெருமை பாராட்டக் கூடாது. அது அவருடைய கிருபை. "என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது" என்று மோசேக்கு தேவன் சொல்கிறார். இன்றைக்கும் அவர் சித்தத்தை, உங்களைக் கொண்டு நிறைவேற்றவே தேவன் உங்களை தெரிந்து கொண்டார். இப்பொழுது பரவிக் கொண்டிருக்கும் எழுப்புதல் பணிக்கென தேவன் உன்னைத் தெரிந்தெடுத்து, அபிஷேகித்து, வல்லமைகளையும், வரங்களையும் ஈந்ததன் காரணம்,

*நீ எழும்பி பிரகாசிப்பதற்காகவும் எரிந்து ஜொலிப்பதற்காகவுமே!*



**நீங்கள் தேவனை தெரிந்து கொள்ளவில்லை, அவரே உங்களை தெரிந்து கொண்டு தன்னுடைய சுவாசக் காற்றாகவும், தன்னுடைய கையின் விரலாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். உன்னுடைய ஒவ்வொரு செயலும், முயற்சியும் தேவனை மகிமைப்படுத்தி அவர் சித்தத்தை செய்கிறவனாய் செயல்படுவது மட்டுமே! உன்னை அவர் முன் குறித்தது, உன்னைக் கொண்டு ஒரு கூட்ட வாலிபர்களை, சேனையாய் எழுப்பவும், எழுப்புதலை உலகெங்கும் பரவச் செய்ய மட்டுமே என்பதை மறவாமல், உணர்ந்து செயல்படு!**

*கிறிஸ்துவின் பணியில்*
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: ஜாய்லின் ஜான்



# சாம்பலிலிருந்து சிங்காரம்..!!

இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலிருந்தே பெற்றோரின் அரவணைப்பு இல்லாமல், வாலிப வயதில், எல்லோராலும் வெறுத்து ஒதுக்கக்கூடிய குப்பைப் பொறுக்கும் தொழில் செய்து, சினிமா பாடலாசிரியராக வேண்டுமென்ற கனவை அடைய பல பாடுகள், அவமானங்கள் அடைந்து, அதில் சாதிக்க முடியாமல் இருந்த நேரத்தில், இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்து, இரட்சிக்கப்பட்டு, இன்றைக்கு பாடல்கள் மூலம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி வரும் போதகர் ஆரோன் பாலாவுடன் ஓர் நேர்காணல்.







**உங்களுடைய குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் கள்ளக்குறிச்சியில் உள்ள புதுப்பட்டு என்ற ஒரு சிறு கிராமத்தில், இயேசுவுக்கும், எங்களுக்கும் சம்மந்தமே இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்தேன். எனக்கு 2 தங்கைகளும், ஒரு தம்பியும் உண்டு. நான் 5 வயது வரைக்கும் தான் என்னுடைய பெற்றோருடன் இருந்தேன். அதன்பிறகு பெரியம்மாவின் வீட்டில் என்னை விட்டுவிட்டு என் பெற்றோர் டெல்லி பட்டணத்திற்கு சென்றுவிட்டனர். நான் எங்கள் கிராமத்தில் உள்ள பள்ளியில் படித்தேன். மதிய உணவு கிடைக்கும் என்பதால் தான் பள்ளிக்கே சென்றேன். அந்த சாப்பாட்டில் புழு பூச்சி இருக்குமே தவிர, எந்த ருசியும் இருக்காது. இருப்பினும், அதை எல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு சந்தோஷமாக சாப்பிடுவேன். பெரியம்மா வீட்டில் தினமும் எழுந்தவுடன் சாணி அள்ளினால் தான் அன்றைக்கு எனக்கு சாப்பாடே (பழைய கஞ்சி அல்லது ஒரு டம்ளர் கூழ்) கிடைக்கும். திருமணம், காதுகுத்து அப்படி ஏதாவது function வந்தால் தான் நல்ல சாப்பாடு சாப்பிடுவேன். விடுமுறை நாட்களில் மாடு மேய்க்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெற்றோரின் அன்புக்காக நிறைய ஏங்கி இருக்கிறேன்.






**உங்கள் சிறுபிராயத்தை நினைக்கும் போது வருத்தமாக உள்ளது. சரி, இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்த நீங்கள் எப்படி இயேசுவை அறிந்து கொண்டீர்கள்?**

நான் 7ம் வகுப்பு படிக்கும்போது எங்கள் கிராமத்தில் sunday class ஊழியம் செய்து வந்த காந்திமதி என்ற அம்மா, ஒரு இரவு சிறுபிள்ளைகளை அமரவைத்து பைபிள் கதைகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நானும் சென்று அமர்ந்தேன். நோவா மற்றும் பேழை பற்றின கதையை சொல்லிக் கொடுத்தார்கள். அப்போதுதான் முதல் முறையாக இயேசுவைப்பற்றி கேள்விப்பட்டேன். அன்றிலிருந்து sunday class செல்ல ஆரம்பித்தேன். அங்கு இதுபோன்ற நிறைய கதைகள் மற்றும் பாடல்களை கற்றுக்கொண்டேன். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டேன். Sunday schoolக்கு செல்ல ஆரம்பித்த கொஞ்ச நாட்களில், ''நீரின்றி வாழ்வேது இறைவா'' என்ற பாடலை ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் stageல் பாடும்படி போதகர் வாய்ப்பளித்தார். அது தான் நான் பாடிய முதல் கிறிஸ்தவ பாடல். அப்பொழுது நான் நன்றாக பாடுவதாக எல்லோரும் என்னை ஊக்குவித்தார்கள்.

**சூப்பர்... 7ம் வகுப்பு படிக்கும்போதே பாட ஆரம்பித்தீர்கள்... உங்களுடைய இளம் வாலிப வயதில் என்னென்ன ஆசைகள் இருந்தது?**

மனிதனாக பிறந்த அனைவருக்கும் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்கவேண்டும் என்ற கனவு இருப்பதைப்போல, எனக்கும் என்னுடைய சிறு வயதிலிருந்தே சினிமாவில் பாடலாசிரியராக வேண்டும், என்ற ஆசை இருந்தது. அந்த நாட்களில் எந்த ஒரு புது சினிமா வெளிவந்தாலும் அதில் உள்ள பாடல்கள் எல்லாமே பாடல் புத்தகமாக ஒரு ரூபாய்க்கு கிடைக்கும். ஆகவே நான் எந்த படம் வந்தாலும், ஒரு ரூபாய் கொடுத்து வாங்கி, பள்ளியில் பாடம் நடத்திக் கொண்டு இருக்கும்போதே, பாடப் புத்தகத்தின் உள்ளே வைத்து, பாட்டை மனப்பாடம் பண்ணிக்கொண்டு இருப்பேன். இப்படி வீட்டில் நிறைய சினிமா பாடல் புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பேன்.

**ஓகே பாஸ்டர்... 5 வயதில் பெற்றோரைப் பிரிந்த நீங்கள் அதன்பிறகு உங்களுடைய குடும்பத்தை சந்தித்தீர்களா?**

9ம் வகுப்பு முடித்துவிட்டு டெல்லிப் பட்டணத்திலிருந்த எனது பெற்றோரிடம் சென்றேன். அங்கு எனது குடும்பம் குப்பைப் பொறுக்கும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நானும் அவர்களோடிணைந்து அந்த வேலையை செய்ய துவங்கினேன். அங்கு எங்களுக்கென்று வீடு கிடையாது. ஒரு சிறிய கூடாரம் அமைத்து தான் வசித்து வந்தோம். தினமும் காலையில் 5 மணிக்கு எழும்பி எங்கெல்லாம் பாட்டில் இருக்கிறதோ அதைப் பொறுக்கிக் கடையில் போட்டு, அதில் வரும் வருமானத்தை வைத்து தான் எங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தோம். குப்பைப் பொறுக்குகிறவர்களை யாரும் மதிக்கமாட்டார்கள். ஒரு பைத்தியக்காரனைப் போல் தான் இருப்பேன்.



நாங்கள் குடும்பமாக குப்பைப் பொறுக்குவதும், பிச்சை எடுப்பதும் தான் எங்களுடைய தொழிலாக இருந்தது. 4 வருடங்கள் நான் என் பெற்றோருடன் அங்கு இருந்தேன்.

**சரி... 9ம் வகுப்பு வரை படித்துவிட்டு, இளம் வாலிப வயதில் இந்த வேலை செய்யும்போது உங்களுக்கு கஷ்டமாக இல்லையா?**

சிறு வயதில் அந்த வாழ்க்கை எங்களுக்கு வசதியாக இருந்தது. படிக்க வேண்டாம், குப்பை பொறுக்குகிற நேரம் தவிர நன்றாக விளையாடலாம் என்பதால் கஷ்டமாக தெரியவில்லை. வளர வளர ஒருசில நேரங்களில் என்னுடைய எதிர்காலம் எப்படி ஆகப்போகிறதோ என்று கவலையாக இருந்தது. சினிமாவில் சேரவோ, பாடலாசிரியர் ஆவதற்கோ படிப்பு தேவை இல்லை என்று என்னை நானே ஆறுதல்படுத்திக் கொண்டு, தொடர்ந்து படிக்க விரும்பவில்லை. ஆனால் எனது மாமாவின் திருமணத்திற்காக 2008ம் வருடம் தமிழகத்திற்கு வந்த பிறகு குப்பை பொறுக்கும் வேலை எனக்கே பிடிக்கவில்லை. அதனால் நான் டெல்லிக்கு திரும்பிப்போகாமல் இங்கேயே இருந்து விட்டேன். சில நாட்களுக்குப் பிறகு நான் கேரளாவிற்கு சென்று ஒரு பை தைய்க்கும் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து, அங்கு ஒன்றரை வருடங்கள் வேலை செய்தேன்.

**சரி... அதன்பிறகு பாடலாசிரியராக வேண்டும் என்ற உங்கள் கனவைத் தொடர்ந்தீர்களா? எப்போது இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றீர்கள்?**

கேரளாவில் நான் செய்து வந்த வேலை மிகவும் கடினமாக இருந்ததால், பாடலாசிரியராக வேண்டுமென்ற கனவைத் தொடர, 2009ம் ஆண்டு என் நண்பன் மூலமாக நான் அணிந்திருந்த உடையோடு, கையில் ஒரு பைசாவும் இன்றி சென்னைக்கு வந்து, அங்கு ஒரு மருத்துவமனை **canteen**ல் வேலைக்கு சேர்ந்தேன். நான் **sunday class**ல் கற்றுக்கொண்ட காரியங்கள், நான் வளர வளர அதுவும் எனக்குள் வளர ஆரம்பித்தது. எனக்கு ஏதாவது பிரச்சனைகள், கஷ்டங்கள் வரும்போது எனக்கு தெரிந்தது இயேசு மட்டும் தான். அவரைத் தான் நான் கூப்பிடுவேன்.



ஒரு நாள் நான் தங்கி இருந்த அறைக்குப் பக்கத்தில் உள்ள ஆலயத்திலிருந்து, காலையில் வேலைக்கு கிளம்பும்போது ''இன்று முதல் நான் உன்னை ஆசீர்வதிப்பேன்'' என்ற வசனம் ஒலித்தது. அந்த வசனம் என்னோடு பேசினது. அன்றைக்கு வேலைக்கு சென்றபோது அந்த மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த ஒருவர் **discharge** ஆகி போகும்போது என்னை அழைத்து என்னிடம் 200 ரூபாய் கொடுத்துவிட்டு, ''உனக்கு இந்த காசு தர வேண்டும் என்று தோன்றினது, அதனால் கொடுக்கிறேன்'' என்று சொன்னார்கள். அன்றைக்கு தான் இயேசு எனக்கு முதல் அற்புதம் செய்தார். இப்படி சின்ன சின்ன அற்புதங்கள் செய்ய ஆரம்பித்தவுடன், தேவைக்காக மட்டும் தவறாமல் ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தேன். ஆனாலும் சினிமா ஆசை என்னை விட்டு விலகவில்லை. பாடலாசிரியராக வேண்டும் என்று கோடம்பாக்கத்தில் ஒரு ஹோட்டலில் வேலைக்கு சேர்ந்தேன். அங்கு வேலை செய்து கொண்டே நிறைய சினிமா கம்பெனிகளுக்கு வாய்ப்பு கேட்டு சென்று வருவேன். இந்நிலையில் 2011ம் ஆண்டு நான் ஞானஸ்நானமும் எடுத்தேன்.

**சூப்பர்... ஞானஸ்நானம் எடுத்த நீங்கள் இயேசுவுக்காக என்ன செய்ய ஆரம்பித்தீர்கள்? ஊழிய அழைப்பை எப்படி, எப்போது பெற்றீர்கள்?**



2012ம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப்பிறகு என் சொந்த ஊருக்கு சென்று அங்கு ஒரு



Mobile கடை வைத்து வியாபாரம் செய்து வந்தேன். ஊருக்கு போனபிறகு தவறாமல் ஆலயத்திற்கு சென்று, தேவனோடுள்ள உறவில் வளர ஆரம்பித்தேன். ஒரு நாள் எங்களுடைய சபையின் போதகர் என்னிடம் சிறுவர் ஊழியத்தின் பொறுப்பைக் கொடுத்து, சிறு பிள்ளைகளுக்கு பாடல்கள் சொல்லி கொடுக்கச் சொன்னார். நான் இந்த ஊழியத்தை உண்மையாக பாரமெடுத்து முழு ஈடுபாடோடு செய்ய ஆரம்பித்தேன். இதற்கிடையில் நான் நடத்தி வந்த மொபைல் கடை மூலமாக நிறைய கடன் ஏற்பட்டதால், மீண்டும் ஏதாவது வேலை பார்த்து கடனை அடைக்கலாம் என்று என் மனைவிப் பிள்ளைகளோடு சென்னைக்கு சென்றேன். வேலை செய்து எப்படியாவது கடனை முற்றிலுமாய் அடைத்து, ஊருக்கு திரும்பி வந்து mobile கடையை மீண்டும் நல்ல முறையில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் சென்னைக்கு சென்றேன். 2016ம் ஆண்டு ஒருநாள் ‘‘உனக்கு இருக்கிற பெலத்தோடு போ’’ என்று ஆண்டவர் என்னோடு பேசினார். ஆண்டவர் ஊழியத்திற்கு அழைக்கிறார் என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. ஆண்டவர் முதல் முறையாக என்னை ஊழியத்திற்கு அழைத்த அழைப்பிற்கு நான் கீழ்ப்படிய மறுத்துவிட்டேன். அதே ஆண்டு அபிஷேகம் பெற்றேன். அதற்கு பிறகு யாரைப் பார்த்தாலும் இயேசுவின் அன்பைப் பற்றி சொல்ல வேண்டும் என்ற பாரம் என்னை அழுத்திக் கொண்டே இருக்கும். அந்த பாரம், ‘ஆண்டவருக்காக ஏதாவது செய்ய வேண்டும்’ என்று எனக்குள் ஒரு வைராக்கியத்தைக் கொடுத்தது. ‘நான் குப்பை பொறுக்கிக் கொண்டிருந்தேன்’ என்று யாரிடமும் ஆரம்பத்தில் சொல்லமாட்டேன். அதை சொல்வதற்கு எனக்கு அசிங்கமாக இருந்தது. அப்போது தான் வேதத்தில் ‘‘அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்’’ (1 சாமுவேல் 2:8) என்ற வசனம் எனக்காகவே எழுதி இருக்கிறது என்பதை அறிந்து, அதன்பிறகு தைரியமாக எனது சாட்சியை சொல்ல ஆரம்பித்தேன்.

> ‘‘வீட்டு வாடகை கொடுக்க முடியவில்லை, பைபிள் எடுத்துக்கொண்டு போகிறாய்’’
> என்று மிகவும் கேவலமாக பேசி வீட்டை காலி பண்ண சொன்னார்கள்.

**ஆத்தும பாரம் பெற்று இயேசுவுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்றிருந்த நீங்கள் முழுநேர ஊழியத்திற்கு வந்தீர்களா?**

2017ஆம் ஆண்டு புது வருட ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ‘‘நீ கடன் பிரச்சனையால் சென்னைக்கு வந்திருக்கிறாய் என்று நீ நினைக்கிறாய்; ஆனால் நீ கடனால் வரவில்லை, நான் தான் உன்னை அழைத்து வந்தேன், நீ எதை இழந்தாயோ அதை நான் கொடுப்பேன், அதற்கு தான் உன்னை வனாந்திரத்தின் பாதையில் நடத்தி வந்தேன்’’ என்று ஆண்டவர் என்னோடு பேசினார். உடனே எனக்கு ஒரு நம்பிக்கை வந்தது. எனக்கு ஊழியம் சென்னையில் தான் என்பதை அறிந்து, மொபைல் கடையை முற்றிலும் அடைத்து விட்டேன். சினிமாவில் பாடலாசிரியராக வேண்டும் என்ற ஆசையோடு இருந்த என்னிடம் ஆண்டவர் பேசினார். ‘‘கிறிஸ்தவப் பாடல்கள் பாடும்போது ஆண்டவரை உயர்த்தி பாட வேண்டும், சினிமா பாட்டு பாடும்போது மனிதனை அல்லது பிசாசை உயர்த்தி பாட வேண்டும், ‘‘நீ யாரை உயர்த்த போகிறாய்?’’ என்று கேட்டவுடன் நான் அன்றைக்கு என்னை ஒப்புக்கொடுத்து, நான் எழுதி வைத்திருந்த எல்லா பாடல்களையும் கிழித்து எறிந்து விட்டு, ‘இனிமேல் சினிமாவில் பாடலாசிரியராக முயற்சிக்க மாட்டேன்’ என்று ஒப்புக் கொடுத்தேன். ஒப்புக்கொடுத்த நாளிலிருந்து இயேசப்பா

அவரைப் பற்றிய பாடல்கள் எழுத கிருபை கொடுத்து வருகிறார். ''நீர் மட்டும் என்னோடு இல்லாமல் போய் இருந்தால்'' என்ற பாடலைதான் தேவன் எனக்கு முதன்முதலாகக் கொடுத்தார்.

**சூப்பர்... ஒப்புக்கொடுத்த பிறகு உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது?**

ஆரம்பத்தில் சிறு சிறு காரியங்களுக்குக் கூட உடனே பதில் வந்தது. ஆனால் நிறைய கடன் இருக்கும்போது ஆண்டவரை நோக்கிப் பார்த்தபோது, பதில் வரவில்லை. மனைவி பிள்ளைகளை விட்டு எங்கேயாவது ஓடிப் போகலாம் என்று நினைத்த நாட்கள் அநேகம். ''வீட்டு வாடகை கொடுக்க முடியவில்லை, பைபிள் எடுத்துக்கொண்டு போகிறாய்'' என்று மிகவும் கேவலமாக பேசி வீட்டை காலி பண்ண சொன்னார்கள். என் நண்பர் வேறு ஒரு வீடு பார்த்து கொடுத்தார். அதில் முழங்கால் போட்டு ஜெபித்தபோது, ''ஜீவன் தரும் வார்த்தை உம்மிடம் உள்ளது'' என்ற பாடலை கொடுத்தார். அந்த பாடல் இன்றைக்கு அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. இப்படி ஆண்டவர் கஷ்டத்தின் மத்தியில் இருக்கும்போது தான் ஆண்டவர் அநேக பாடல்களைக் கொடுத்து என்னை தேற்றினார்.



**இத்தனைப் பாடுகள் மத்தியிலும் கைவிடாமல் நடத்தி வந்த கர்த்தருக்கு முழுநேரமாக ஊழியம் செய்ய எப்போது ஆரம்பித்தீர்கள்?**

2018ம் வருடம் என் அழைப்பை உறுதிப்படுத்தி, **Omega Ministries** என்ற ஊழியத்தை ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். முதலாவது நான் சர்ச் ஆரம்பிக்கும்போது 10 பேர் அமரக்கூடிய ஒரு இடத்தை கொடுத்தார். பிறகு படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு கோடம்பாக்கத்தில் 250 பேர் அமரக்கூடிய அளவிற்கு ஒரு ஆலயத்தைக் கொடுத்து தேவன் ஆசீர்வதித்திருக்கிறார். என் மனைவி எனக்கு ஊழியத்தில் மிகவும் உதவியாக இருக்கிறார்கள். கர்த்தர் எங்களுக்கு 3 பிள்ளைகளை கொடுத்திருக்கிறார்.

**அற்புதம்... கர்த்தர் உங்களுக்கு தந்த பாடல்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கின்றன. குறிப்பாக "என் கருவை கண்டீரய்யா" என்ற பாடல் viral ஆகி அனைவர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. அந்த அனுபவத்தைச் சொல்ல முடியுமா?**

''என் கருவைக் கண்டீரைய்யா'' என்ற பாடல் **record** பண்ண பணம் இல்லாமல், என்னிடம் இருந்த ஒரே பைக்கை குறைந்த விலைக்கு விற்று **record** பண்ணினேன். மே மாதம் **shoot** செய்து செப்டம்பர் மாதம் வரைக்கும் பாடல் வெளிவரவில்லை. அப்போது 'ஆண்டவரே, எனக்கு பாட்டெல்லாம் தர வேண்டாம், பணம் இருக்கிறவர்களிடம் கொடுங்கள்' என்று சொன்னேன். ஆனால் ஆண்டவர் அவருடைய வார்த்தையின் மூலம் தேற்றி அந்த பாடல் வெளிவர உதவி செய்து, 8 மாதத்தில் 9 மில்லியன் **views** பெற கிருபை செய்தார். இன்னும் அநேக பாடல்களை எழுத கிருபை செய்து வருகிறார். இதுவரைக்கும் 50க்கும் அதிகமான பாடல்களை கர்த்தர் எனக்கு தந்து, 13 பாடல்களை வெளியிடவும் கிருபை செய்துள்ளார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அன்பான வாலிபர்களே! இன்றைக்கு ''யாரும் என்னை மதிக்கவில்லை, எல்லோராலும் ஒதுக்கப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறேன்'' என்ற கலங்குகிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள்! எவரையும் உயர்த்தவும் மேன்மைப்படுத்தவும் இயேசுவால் முடியும் என்பதற்கு நானே சாட்சி. அன்புக்காக ஏங்கி, சரியான சாப்பாடு இல்லாமல், குப்பைப் பொறுக்கி வாழ்க்கை ஓட்டிக் கொண்டிருந்த என்னை, தம்முடைய உன்னத சேவைக்காக பிரித்தெடுத்து கர்த்தரால் உயர்த்த முடியுமானால், உங்களையும் கண்டிப்பாக உயர்த்தி அநேகருக்கு ஆசீர்வாதமாக வைப்பார். ஆனால் அதற்கு நீங்கள் தேவனின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவரின் வேளை வரும் வரை காத்திருக்க வேண்டும். ஆண்டவர் உங்களை உடைத்து உருவாக்க இடம் கொடுக்க வேண்டும். அப்பொழுது உங்களை சுத்தப் பொன்னாக மாற்றி சிங்காரத்தில் வைத்து அழகு பார்ப்பார்.

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

## கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு வசன இருப்பிட ஆதாரத்துடன் பதிலளிக்கவும்.

1) யார் தேவனுக்கு நண்பன் என்று கருதப்பட்டான்?

2) இரவு பகல் 7 நாட்கள் யோபுவுடன் கூட தரையில் உட்கார்ந்திருந்த யோபுவின் நண்பர்கள் யார்?

3) இயேசு கிறிஸ்து எந்த மூன்று நபர்களிடத்தில் அன்பாயிருந்தார்?

4) முற்காலத்தில் பகைவர்களாக இருந்து நியாய விசாரணையின்போது நண்பர்களாக மாறின அரசனும், ஆளுநரும் யார்?

5) பவுலுக்கு நண்பர்களாக இருந்த கணவன் மனைவி யார்?

6) பல வருடங்கள் தகப்பனுடனும், மகனுடனும் நண்பனாகவும், வியாபார நண்பனாகவும் இருந்த ராஜா யார்?

7) தனது ராஜாவிடம் இருந்து தனக்கு மேல் பதவிக்கு உயர்வு வந்தபோது, தனது 3 நண்பர்களையும் உயர்த்த வேண்டுமென்று ராஜாவிடம் கேட்டுக்கொண்ட நபர் யார்?

8) ஆணையிட்டுக் கொண்டு நண்பர்களான இரண்டு பேர் யார்?

9) இவர்களை பொருத்துக:

- தானியேல் - யோனத்தான்
- தாவீது - லாசரு
- இயேசு - சாத்ராக்




10) ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் .................. கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

### கடந்த மாத விடைகள்

1. வேலை செய்ய மனதில்லாவன் / சோம்பேறி (2 தெச. 3:10)
2. ஆமான் (எஸ்தர் 5:12) / லாசரு (யோவான் 12:2)
3. பார்வோன் (யாத். 7-14 அதி)
4. எலிசா (2 இராஜா. 2:23)
5. சிம்சோன் (நியா. 16:17-21)
6. பிகேமோத் (யோபு 42:15,23)
7. எகிப்தின் ராஜாவாகிய 'சோ' (2 இராஜா. 17:4)
8. கோஸ் தீவு (அப். 21:1)
9. நன்மை (ஏசாயா 17:1)
10. பண ஆசை (1 தீமோ. 6:10)




**கடந்த மாத வெற்றியாளர்:**

சகோதரி நிர்மலா, தூத்துக்குடி

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.08.2024**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

Heart Beat



ஆலோசனை: அவி

# உணர்வைத் தூண்டாதே; உயிரை இழக்காதே...

நான் எட்டாம் வகுப்பு படித்து வருகிறேன். என்னுடன் படிக்கும் நண்பன் மூலமாக LGBTQ பற்றி தெரிந்து கொண்டேன். அதன்பிறகு பல புதிய நண்பர்கள் அறிமுகமாகி, அவர்கள் எல்லோரும் என்னுடன் சகஜமாக பழகுவார்கள். ஒருவர் மட்டும் என்னிடம் மிகவும் அன்பு காட்டினார். அவருடைய அன்பான வார்த்தை, கரிசனை என்னை அதிகமாக ஈர்த்தது. தற்பொழுது அவருடன் தவறான உறவில் இருக்கிறேன். எப்பொழுதும் அந்த நபரோடு பேசுவதும் அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் இருக்கிறது. இது தவறு என்று தெரிந்தும், என்னால் வெளியே வர முடியவில்லை. என் படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை. நான் என்ன செய்வது?

- அபிஷேக்.

அன்பு தம்பி அபிஷேக், உங்களின் கடிதம் படிப்பதற்கு சற்று அதிர்ச்சியாக இருக்கிறது. இன்றைய இளைய சமுதாயம் மேற்கத்திய கலாச்சாரம் என்ற பெயரில் பல தவறான பழக்கத்திலும், ஆபத்தான பாதையிலும் சென்று கொண்டிருப்பது வருத்தம் அளிக்கிறது. அபிஷேக், நீங்கள் ஈடுபட்டிருப்பது ஒரு தவறான உறவில் அல்ல, மிகவும் ஆபத்தான அசுத்தமான உறவும் கூட.

அபிஷேக், இது ஒரு இயல்பான உறவோ, சினேகமோ அல்ல. சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படாததும், இழிவானதும், குறிப்பாக வேதத்திற்கு புறம்பானது. இந்த விதமான பாவத்தில் ஈடுபடுவது குற்றமென்று நம் இந்திய சட்டத்தில் இருந்தது; ஆனால் மனிதன் நவீனம், கலாச்சாரம் என்று சொல்லி இயல்பு வாழ்க்கைக்கு புறம்பாகவும், எதிராகவும் வாழ முயல்கிறது. ஒழுக்கம், உண்மை, பண்பு, அடக்கம் என்பதெல்லாம் மலையேறி விட்டது என்று நன்கு புரிகின்றது.

வேதத்தில் ஒரு வசனம் இருக்கிறது; **"தீமையை நன்மையென்றும் நன்மையை தீமையென்றும் சொல்லி இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளாக பாவித்து, கசப்பை தித்திப்பும், தித்திப்பை கசப்பும் என்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசாயா 5:20).** இன்றைக்கு உலகம் தவறான ஒரு காரியத்தை, தீமையான ஒரு உறவை, நன்மை என்று சொல்லுகிறது. ஆபத்தான பழக்கத்தை 'அங்கீகரிக்கிறோம்' என்று குரல் கொடுக்கிறது. தேவன் எல்லா பாவத்தையும் மன்னிக்கிறார், ஆனால் சோதோம் கொமோரா பாவத்தை தேவன் முற்றிலும் அருவருக்கின்றார். இந்த பாவத்தினால் தான் அந்த பட்டணமே அழிந்து போனது. தேவன் உண்டாக்கின அழகிய உறவுகளையும், ஒழுக்கங்களையும், ஒழுங்குகளையும் பிசாசு குலைத்து, அதற்கு மாறாக, தவறான உறவுகளையும், ஒழுங்கீனங்களையும், கொண்டு வந்து, மனிதகுலத்தின் பண்புகளை மாற்றி, பாவ செயல்களை செய்யத் தூண்டுகிறான்.

இந்த LGBTQக்கு பின்னால் சாத்தானும் அவனுடைய கூட்டமும், பல கார்ப்பரேட்டுகளும் இருந்து செயல்படுகின்றன. எனவே நாம் விழிப்போடிருந்தால் தான், இப்படிப்பட்ட பாவப்பழக்கத்திற்கு நம்மை விலக்கி, பரிசுத்தமாக நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

LGBTQ

DANGER

## அபிஷேக், ஒருவேளை இந்த பாவத்தை தொடர்ந்தால் என்ன ஆபத்து நேரிடும்:

- தற்போதுள்ள தவறான உறவினால் மேலும் பல தவறான காரியங்களில் தொடர்ந்து ஈடுபட நீங்கள் வற்புறுத்தப்படுவீர்கள்.
- உடல் ரீதியான பல வியாதிகளும் தொற்று நோய்களும் உண்டாகும்.
- இந்த காரியம் உங்கள் பெற்றோருக்கு தெரிந்தால் மிகவும் அவமானமாகவும் வேதனையாகவும் மாறும். இதனால் மிகுந்த குழப்பமும், பிரச்சனைகளும் உங்கள் குடும்பத்தில் வெடிக்கும்.
- உங்கள் படிப்பு கட்டாயம் பாதிக்கும், பள்ளியில் இருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டு, உங்கள் எதிர்காலமே இருளாய் மாறும்.
- எந்த நட்பு உண்மை, இனிமை, இன்பம் என்று யோசித்தீர்களோ, அந்த நபர் தன்னுடைய தேவைக்காக மட்டும் உங்களை உபயோகித்துவிட்டு, கட்டாயம் வேறு ஒருவரோடு செல்ல வாய்ப்பு உண்டு.
- இதனால் மன உளைச்சலும் மனவேதனையும் உண்டாகி நீங்கள் உடைந்து போய், ‘எல்லா உறவுகளும் கைவிட்டார்களே’ என்று எண்ணி தவறான முடிவுக்கு போகலாம்.

## ஒருவேளை இந்த உறவிலிருந்து வெளியே வந்தால்:

- சற்று கடினமாக இருந்தாலும், ஒழுக்கமான வாழ்வு வாழ்கின்றோம் என்ற நிம்மதி இருக்கும்.
- தவறு செய்கின்றோமே என்ற குற்ற மனசாட்சி இருக்காது.
- எப்பொழுது மாட்டிக்கொள்வோம், நம்மை சமுதாயம் கேவலமாய் பார்க்குமே என்ற பயம் இருக்காது.
- உங்களுடைய படிப்பில் கவனம் செலுத்த முடியும்.
- உங்கள் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் உண்மையான உறவின் மகிழ்ச்சியும் கிடைக்கும்.



## இந்த தவறான அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர சில வழிகள்:

- முதலாவது உங்களை இப்படி ஒரு தவறான கூட்டத்திற்கு அறிமுகப்படுத்திய நண்பரின் நட்பைத் துண்டியுங்கள்.
- உங்களை தவறான உறவுக்குள் நடத்திய அந்த நபரை சந்திப்பதை தவிர்க்கவும்.
- அவருடன் எந்தெந்த வழியில் (FB, INSTA, WHATSAPP) தொடர்பு கொள்கிறீர்களோ, அவற்றை உடனே துண்டிக்க வேண்டும்.
- அந்த நபரோடு பேசும் எண்ணம் வரும்போது PRODUCTIVE ஆன காரியங்களை செய்து, உங்களை பிசியாக வைத்துக் கொள்ளலாம்.
- தனிமையில் அவரைப் பற்றிய எண்ணங்கள் அதிகம் வரும் என்பதால், தனிமையை தவிர்க்க முயலுங்கள்.
- விளையாடுவது அல்லது ஒரு INSTRUMENT கற்றுக் கொள்வது என ஏதாவது ஒரு வழியில் உங்களை ENGAGED ஆக வைத்துக் கொள்ளுங்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவே இந்த பாவத்திலிருந்து எனக்கு விடுதலை தாரும் என்ற ஜெபத்தை செய்யுங்கள். குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8:36). அபிஷேக், இயேசு உங்களுக்கு விடுதலை தந்து, புதிய ஒரு வாழ்க்கை வாழ உதவி செய்வார். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17) என்ற வார்த்தையின்படி:

**ஒரு புதிய வாழ்க்கை, புதிய பாதையில் வாழ முடியும்! முயலுங்கள், முன்னேறிச் செல்லுங்கள்!!**





# நல்ல பங்கு!!

செய்தி: மோகன் சி. லாசரஸ்

இயேசுகிறிஸ்து கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வரும் போதெல்லாம் பெரும்பாலும் எரிகோ வந்து, பெத்தானியா வழியாக பெத்பகே வந்து, ஒலிவமலைக்கு இறங்கி, எருசலேம் பட்டணத்திற்கு போவது அவரது வழக்கம். அப்படி ஒருநாள், பெத்தானியா கிராமத்திற்கு வந்த போதுதான் இந்த குடும்பத்தோடு ஆண்டவருக்கு பழக்கம் ஏற்பட்டது. **“இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்”** என்று யோவான் 11:5ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தாய் தகப்பன் இல்லாத அந்த பிள்ளைகளை இயேசு தன் பிள்ளைகளைப் போல நேசித்தார். அவர்களுக்குள் நல்ல ஐக்கியம் இருந்தது. இயேசு எருசலேமுக்கு வரும்போதெல்லாம் பெத்தானியாவில் வந்து, இந்த குடும்பத்தாரோடு பேசி பழகி, அல்லது உணவு அருந்தி விட்டு கடந்து போவார்.

## எப்படி இந்த குடும்பத்தோடு இயேசுவுக்கு இவ்வளவு பெரிய ஐக்கியம் ஏற்பட்டது? இந்த வீட்டாருக்கும், இயேசுவுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டது?

‘‘அவர்கள் பிரயாணமாய் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்’’ (லூக்கா 10:38) என்று சொல்லப்படுகிறது.

இயேசு எங்கு போனாலும் அவரைச் சுற்றிலும் திரள் கூட்ட ஜனங்கள் அவருக்கு பின் சென்றார்கள் என்பதாக வேதத்தில் நாம் திரும்ப திரும்ப வாசிக்கிறோம். மார்த்தாளும் அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக இயேசுவைக் காண வருகிறாள். உடனே ‘இயேசு நம் வீட்டிற்கு வந்தால் எப்படி இருக்கும்’ என்று மார்த்தாளுக்குள் ஆசை வருகிறது.

மார்த்தாளுக்குள் ‘இயேசுவை நம் வீட்டுக்கு கூப்பிட வேண்டும்; ஆனால் அவரைச் சுற்றிலும் எப்போதும் சீஷர்கள், ஜனங்கள் என ஒரு கூட்டமே இருக்கும்போது, ‘எங்கள் வீட்டிற்கு வாரும் என்று கூப்பிட்டால் வருவாரா?’ என்று இதயத்திற்குள் ஒரு போராட்டம். இந்த போராட்டத்திற்கு மத்தியிலும், ‘இயேசு வீட்டிற்கு வந்தால் எவ்வளவு பாக்கியம்’ என்று, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, இயேசுவுக்கு முன்னால் போய் நின்று ஸ்தோத்திரம் பண்ணி, ‘எங்கள் வீட்டுக்கு நீர் வரவேண்டும்’ என்று அழைத்திருப்பாள். அன்புக்காக

அவள் உள்ளம் ஏங்கியது. 'எங்களுக்கு தகப்பன் இல்லை, தாய் இல்லை, நீர் எங்கள் வீட்டிற்கு வந்து ஆசீர்வதிக்க வேண்டும்' என்று கூப்பிட்டிருப்பாள். இயேசு அந்த வாஞ்சையைப் பார்க்கிறார், உடனே அவர் அதை மறுக்காமல், 'நான் வருகிறேன் மகளே' என்று சொல்லி, இயேசுவும் 12 சீஷர்களும் அந்த வீட்டுக்குள் போய்விட்டனர். 'வானத்தையும் பூமியையும் உண்டாக்கின ஆண்டவர், பெரிய தீர்க்கதரிசி, என் இரட்சகர், என் வீட்டுக்கு வந்துவிட்டார்' என்ற சந்தோஷத்தில் இயேசுவை உட்கார வைத்துவிட்டு, மார்த்தாள் 'இயேசுவுக்கு என்ன பிடிக்குமோ' என்று வகை வகையாக சமைக்க சமையல் அறைக்கு சென்று விட்டாள்.

மார்த்தாளுக்கு மரியாள் என்ற சகோதரியும் இருந்தாள். இயேசுவைப் பார்த்த உடனே மரியாள் இயேசுவின் பாதத்தில் வந்து அமர்ந்து, 'ஆண்டவரே தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து சொல்லுங்கள், பரலோக ராஜ்ஜியத்தைக் குறித்து சொல்லுங்கள், என்னிடம் பேசுங்கள்' என்று இயேசுவிடம் கேட்கிறாள். இயேசுவும் அவளிடம் சந்தோஷமாக பேசிக் கொண்டிருக்கிறார். மரியாள் இயேசுவிடம் பேசுகிறதைக் கேட்டவுடனே மார்த்தாள் சமையல் அறையில் இருந்து வந்து, கோபமாக 'நான் சமையல் அறையில் கஷ்டப்படுகிறேன்; மரியாள் எனக்கு உதவி செய்யாமல் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறாளே, நீர் அவளிடம் சொல்லியிருக்கலாமே' என்று, இயேசுவை கூப்பிட்டு வீட்டில் வைத்துக் கொண்டு, இயேசுவையே குற்றப்படுத்துகிறாள். இயேசு மார்த்தாளைப் பார்த்து: மார்த்தாளே, மார்த்தாளே! நீ அவசியமில்லாத அனேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய், மரியாளைப் பார், என் பாதத்தின் அருகில் உட்கார்ந்து நான் சொல்வதைக் கேட்கிறாள், தேவையானது ஒன்றே, இதுதான் நல்ல பங்கு என்று இயேசு கூறினார்.

ஒருவேளை மார்த்தாளைப் போல நாமும் எப்படியாவது இயேசுவை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சுவிசேஷம் அறிவிக்கலாம், சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், கைப்பிரதி ஊழியம், கிராம ஊழியம் போன்ற பல ஊழியங்களை செய்யலாம். இவையனைத்தும் முக்கியம் தான். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மேலானது நாம் அவரது பாதத்தில் காத்திருப்பது. மார்த்தாளைப் பாருங்கள் அவள் இயேசுவிடம் 'அவருக்கு சாப்பிட என்ன வேண்டும், என்ன விருப்பம், இப்போது சாப்பிடும் மனநிலையில் உள்ளாரா' என்று



எதுவுமே கேட்காமல் அவரைப் பிரியப்படுத்த அவளாகவே ஏதோ ஒன்றை பதட்டமாக செய்து கொண்டிருந்தாள். நாமும் கூட பல வேளைகளில் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து அவரிடம் எதுவும் விசாரிக்காமலே நாமாகவே பல ஊழியங்களை மிகவும் பிரயாசப்பட்டு செய்கிறோம். ஆனால் தேவன் அதில் பிரியப்படுகிறாரா என்பதை பல வேளைகளில் அறிய மறந்து விடுகிறோம். நாம் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து ஜெபிக்காமல் வேதம் வாசிக்காமல் ஆவியானவரின் வழிநடத்துதல் இல்லாமல் ஒரு காரியத்தை செய்யும் போது அதில் குழப்பம், எரிச்சல், சமாதான குறைவு, சோர்வு, ஏமாற்றம் போன்றவை ஏற்படும். நம்மால் அதை திறம்பட செய்து முடிக்க முடியாது. இறுதியில் மார்த்தாளைப்போல நாம் தேவனையே குற்றப்படுத்தும் நிலைக்கு தள்ளப்படுவோம்.

அன்பான வாலிபர்களே! ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் மரியாளைப்போல, நாம் அவர் பாதத்தில் அமர்ந்து அவரை அறிகிற அறிவில் வளர்ந்து, அவரோடுள்ள உறவில் நாளுக்கு நாள் வளர வேண்டும் என்பதே. அப்படி அவரோடுடனான உறவில் நாம் வளரும்போது, அவருடைய சத்தத்தை மிகத் தெளிவாக கேட்க முடியும். அவருடைய இருதயத்தின் பாரங்களை அறிந்து கொள்ள முடியும். அவர் பாதத்தில் அமர்ந்து அவர் சத்தத்தைக் கேட்டு, சித்தத்தை அறிந்து அவர் விரும்புகிறபடி செய்கிற ஊழியத்தில் தான் ஆண்டவர் பிரியப்படுகிறார். எனவே மரியாளைப்போல கர்த்தருடைய பாதத்தில் அமர்வதை எல்லாவற்றிற்கும் மேலானதாக கருதி, அவர் விருப்பப்படி காரியங்களை செய்யும்போது கர்த்தர் அதற்கேற்ற பெலனையும், ஞானத்தையும், கிருபைகளையும், அபிஷேகத்தையும் தந்து மன நிறைவுடன் திறம்பட செய்து முடிக்க உதவி செய்வார். நல்ல பங்கைத் தெரிந்து கொள்ள ஆயத்தமா???

வேதாகம கதாபாத்திரம்: சுமா



# சிப்பிக்குள் முத்து

# பர்னபா

இளம் வாலிபர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். சிப்பிக்குள் முத்து என்ற தொடரில் இம்மாதம் நாம் பார்க்க இருக்கும் தேவ மனிதர் பர்னபா. இவருடைய பெயர் யோசே, ஆனால் அப்போஸ்தலராலே 'ஆறுதலின் மகன்' என்று அர்த்தங்கொள்ளும் "பர்னபா" என்று அழைக்கப்பட்டார் (அப். 4:36). இவர் சீப்புரு தீவிலிருந்து வந்த ஒரு லேவியன். பர்னபாவைப் பற்றி வேதம் குறிப்பிடும் போது இவன் "நல்லவன் என்றும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவன்" (அப். 11:24) என்றும் குறிப்பிடுகிறது. மேலும் இவர் உபவாசம் செய்து ஜெபிக்கிறவராகவும் இருந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின், சீஷர்களுடன் ஐக்கியம் கொள்ளப் பார்த்தார். ஆனால் சீஷர்களோ பவுலைத் தங்களிடம் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நேரத்தில் ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா, பவுலை அரவணைத்துக் கொண்டு, பின்பு அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டு போனார். அதற்குப்பிறகு தேவன் பவுலை வல்லமையாக பயன்படுத்துவதைக் கண்ட பர்னபா மனத்தாழ்மையோடு கண்டுணர்ந்த முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவராக இருந்தார்.

பர்னபா ஊக்கம் மிகுந்த ஊழியக்காரராக காணப்பட்டார். இவர் தர்ம ஊழியம் மற்றும் தான் சென்ற இடங்களிலெல்லாம் சபையாருக்கு புத்தி சொல்லும் ஊழியத்தையும் செய்து வந்தார். அதுமட்டுமன்றி தானும் சாட்சியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். பர்னபா தேவ வசனத்தை சொல்வதில் எவ்வித தயக்கமுமின்றி, தைரியமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தார். அதன்விளைவாக பர்னபாவின் மூலம் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டது. பவுலின் முதலாவது மிஷனெரி பிரயாணத்தின் போது, பர்னபா பவுலோடு உடன் ஊழியராக சென்றார். சென்ற இடங்களில் எல்லாம் தேவ சித்தத்தை முழுவதுமாக செய்து முடித்தார்.

இதை வாசிக்கும் வாலிபர்களே, பர்னபா தன் பெயருக்கு ஏற்ப ஆதித்திருச்சபையில் ஆறுதலின் மகனாக இருந்தார். தனக்கு எந்த பொறுப்பு கொடுத்தாலும் அதில் தேவனுடைய மகிமையை வெளிப்படச் செய்தார். இந்த காலகட்டத்தில் நாமும் பர்னபாவைப் போல் எழும்பி சபைகளைத் திடப்படுத்திக் கொண்டு, சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து தேவசித்தத்தை முழுவதும் நிறைவேற்ற நம்மையும் கர்த்தரிடம் அர்ப்பணிப்போமாக!

# எழுப்புதலை பற்றவைப்போர்...

(ஆதி அப்போஸ்தலர் நாட்களில் நடந்த அற்புதங்கள் இந்நாட்களில் Igniters மூலமாக நடைபெறுகிறது)

## கோவை மண்டலம்



நான் Revival Igniters 4th batch campக்கு வந்தபோது மோகன் அங்கிள் Igniters அனைவரும் கர்த்தருக்காக செயல்பட வேண்டும் என்று சொன்னார்கள். நான் எப்படி செயல்படுவது என்று தெரியாமல் இருந்தேன். அப்போது மதுக்கரை பகுதியில் உள்ள ஒரு ஆலயத்தில் போய் ஜெபிக்க ஆரம்பித்தேன். அப்படி ஒரு நாள் 3 மணி நேரத்துக்கும் மேலாக வேதம் வாசித்து, ஆவியில் நிறைந்து ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, சபையில் ஜெபிப்பதற்காக 4 பாட்டிகள் வந்தார்கள். அதில் ஒரு பாட்டி யாரோ இறந்து போனதுபோல், மிகவும் கண்ணீருடன் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். 'ஏன் பாட்டி இப்படி அழுகிறீர்கள்' என்று கேட்டபோது, செய்கையில் எனக்காக ஜெபி என்று சொன்னார்கள். அப்போது பக்கத்தில் இருந்த பாட்டி அவர்களுக்கு காதும் கேட்காது, வாயும் பேசமாட்டார்கள் என்று சொன்னார்கள். உடனே அந்த பாட்டியின் கரங்களைப் பிடித்து ஜெபித்தபோது, வாய் பேசாத, காது கேட்காத பாட்டி அல்லேலூயா, ஸ்தோத்திரம் என்று சத்தமாக சொன்னார்கள். ஜெபித்த அந்த நேரமே ஊமையும் செவிடுமாக இருந்த அந்த பாட்டிக்கு அற்புத சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

## கடலூர் மண்டலம்





எங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு தங்கை 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது brain cancerரால் பாதிக்கப்பட்டு '4th stage, உயிர் பிழைக்கமாட்டாள்' என்று டாக்டர்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியை பார்க்கும்போது கதவு, ஜன்னல் திறந்து வைத்து பார்ப்பது வழக்கம். அதைப் பார்த்து ஒரு நாள் அந்த மகளுக்காக ஜெபிக்க எங்களை அழைத்தார்கள். நாங்கள் இயேசுவின் நாமத்தினால் ஜெபித்தபோது கர்த்தர் கேன்சர் வியாதியிலிருந்து அந்த மகளுக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். இப்பொழுது நல்ல சுகத்தோடு கல்லூரிக்கு சென்றுகொண்டு இருக்கிறாள்.

அது மாத்திரமல்ல ஒரு சிறு தம்பிக்கு தொண்டையில் கேன்சர் வியாதி தாக்கி 4th stageல் கைவிடப்பட்ட சூழ்நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான். 'நீங்கள் ஊழியம் செய்கிறீர்கள் எங்கள் ஊரில் ஒரு பையனுக்கு உடம்பு சரியில்லை ஜெபம் பண்ணுங்கள்' என்று ஒருவர் எங்களை அழைத்து சென்றார்கள். நங்கள் சென்று ஜெபித்தபோது கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தொண்டையில் இருந்த கேன்சரிலிருந்து முற்றிலுமாக விடுதலைக் கொடுத்து, இப்போது அந்த சிறுவன் நன்றாக இருக்கிறான். இந்த இரண்டு அற்புதங்களையும் எங்களைக்கொண்டு செய்து தம்முடைய வல்லமையை விளங்கச்செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

அலசல்: கெத்சி கிளார்வின்

# உணர்வுகள்
# குற்ற உணர்ச்சி




துடிப்பான வாலிபர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! ஒவ்வொரு மாதமும் இந்த 'உணர்வுகள்' தொடரின் மூலம் உங்களை சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி. கடந்த மாதம் கவலையைப் பற்றி அறிந்து கொண்டீர்கள். கவலையோடு இருந்த அநேகரை கர்த்தர் விடுவித்திருப்பார் என்று நம்புகிறேன். இந்த மாதம் மற்றுமொரு உணர்வான 'குற்ற உணர்ச்சி'யைப் பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

உங்களது வாழ்வில் ஏதாவது எதிர்மறையான காரியம் நடந்தால், உடனே நீங்கள் ''நான் அன்று கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை, பாவங்களை செய்ததின் விளைவாகத்தான், இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று எண்ணுகிறீர்களா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பகுதியின் மூலம் நிச்சயமாக உங்களுடன் இடைப்பட்டு உங்களுக்கு ஒரு மனத்தெளிவை தந்து சமாதானம் அருள்வார். மேலும் குற்ற மனச்சாட்சியிலிருந்தும் விடுதலை தருவார்.

## குற்ற உணர்ச்சிக்கான முக்கிய காரணங்கள்:

- நாம் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தது.
- நமது சொந்த சரீரத்திற்கு விரோதமாக பாவம் செய்தது. (போதை மருந்துகள், ஊசிகள், மதுபானம் மற்றும் தவறான உறவு போன்றவை)
- அப்பா அம்மாவிற்கு அல்லது ஏதேனும் உறவுகளுக்கு நம்பிக்கை துரோகம் செய்தது.
- வேலை ஸ்தலத்தில் சிலரை ஏமாற்றி **promotion** பெற்றது.




இப்படிப்பட்ட பல காரணங்களைக் காட்டி பிசாசானவன் நமக்குள் குற்ற மனச்சாட்சியைக் கொண்டு வருவான். அந்த சமயத்தில் நாம் மனத்தெளிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## வேதாகமத்தில் குற்ற உணர்ச்சியைக் கையாண்டவர்கள்:

வேதாகமத்தில் யூதாஸ் காரியோத்து என்ற சீஷன், இயேசுவை 30 வெள்ளிக்காசுக்கு காட்டி கொடுத்து துரோகம் இழைத்தாலும், அவன் அச்செயலுக்காய் வருத்தப்பட்டதோடு, தற்கொலை செய்து தன் உயிரையும் மாய்த்துக் கொண்டான் (மத்தேயு 27:5).



ஆனால் இதே சூழ்நிலையில், இயேசுவின் முக்கிய சீஷர்களில் ஒருவரான பேதுருவும் இயேசுவை மறுதலித்த சம்பவத்தை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். ஆம்! தன் தலைவருக்கு பேதுரு பெரிய துரோகம் செய்தாலும் கூட, அதற்காக வருத்தப்பட்டதோடு அல்லாமல், அதற்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு தன் வாழ்வில் விடுதலையை ருசித்தார் (லூக்கா 22:62).



## குற்ற உணர்ச்சியை மேற்கொள்ள சில எளிய தீர்வுகள்:

**மனந்திரும்புதல்:** உங்கள் பாவங்களை தேவனிடம் உண்மையாக ஒப்புக்கொண்டு, மன்னிப்பு கேளுங்கள். (1 யோவான் 1:9).

**தேவனின் மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்:** கிறிஸ்து மூலம் தேவன் அளிக்கும் மன்னிப்பின் வாக்குறுதியை நம்புங்கள். கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரம் அவர் நம் குற்றங்களை நம்மை விட்டு அகற்றுகிறார் என்பதை நம்புங்கள் (சங்கீதம் 103:12).

**உங்கள் மனதை புதுப்பிக்கவும்:** குற்ற உணர்வுகளை வேதம் கூறும் உண்மையால் மாற்றுங்கள். தேவனின் அன்பு, கிருபை மற்றும் மன்னிப்பை நினைவூட்டும் வேத வசனங்களை தியானியுங்கள்.

**ஆவிக்குரியவர்களின் ஆதரவைத் தேடுங்கள்:** தங்களுடைய வழிகாட்டல் மற்றும் ஜெபத்தின் மூலம் ஊக்கமளிக்கும் நம்பகமான கிறிஸ்தவ நண்பர், போதகர் அல்லது ஆலோசகருடன் உங்கள் மனதின் காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**சுதந்திரமாக நடக்கவும்:** மன்னிக்கப்பட்டபின், கிறிஸ்து இயேசு வழங்கும் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். விசுவாசத்தின் மூலம் நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை அறிந்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழுங்கள் (ரோமர் 5:1).

குற்ற உணர்வில் இருந்த பேதுரு விடுதலைப்பெற மிக முக்கிய காரணமாய் இருந்தது இயேசு அவருக்கு பரிசாய் தந்த ''மன்னிப்பு''. அதுபோல, நீங்கள் யாருக்கேனும் துரோகம் இழைத்ததினால் குற்ற உணர்வில் இருந்தால் அந்த நபரிடம் உடனே மன்னிப்பு கேட்க முயற்சியுங்கள். மன்னிப்பு கேட்க இயலாத சூழ்நிலையில், மன்னிப்பதில் வல்லவரான இயேசு கிறிஸ்துவிடம் முதலாவது மன்னிப்பைப் பெற்று குற்ற உணர்வில் இருந்து விடுதலைப்பெற முயலுங்கள்.

**“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (I யோவான் I:9).**



இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாலிபரே! குற்ற உணர்வில் வருத்தப்படுவதால் பிரயோஜனம் இல்லை. மாறாக இதற்கான ஒரே தீர்வான மன்னிப்பை அனுபவிப்பவராய் மாறினால் உங்களின் வாழ்வு மறுரூபமாக்கப் படும்.



முகப்பு செய்தி: சதீஷ்

# தேவனின் தெரிந்தெடுப்பு!

இந்த உலகம் ஞானமுள்ளவர்களை, கல்விமான்களை, பெலமுள்ளவர்களை, திறமையானவர்களை, அழகானவர்களை தெரிந்தெடுத்து, பதவிகளையும் பொறுப்புகளையும் கொடுக்கிறது. ஆனால் தேவனின் தெரிந்தெடுப்பு எப்பொழுதும் வித்தியாசமானதாயும், நாம் விளங்கிக் கொள்ள முடியாததாயும் இருக்கிறது. எப்படியெனில், **"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்"** (I கொரி. 1:27). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதன் எப்படிப்பட்ட நிலமையில் இருந்தாலும் சரி, அவனை சந்தித்து, தனக்கு உகந்த பாத்திரமாக மாற்றி, அவர்களைக் கொண்டு வல்லமையான பெரிய காரியங்களை செய்ய தேவனால் முடியும்.

இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையில் அவர்களை வழி நடத்தின தலைவர்கள் எப்படி இருந்தார்களோ அதன்படியே இருந்தது. ஒத்னியேல், தெபோராள், கிதியோன் இவர்களுக்கு பின்பு ஜனங்களை வழிநடத்தவும், நியாயம் விசாரிக்கவும், சரியான நபர்கள் இல்லாததினால் ஜனங்கள் சீர்கெட்டுப்போய் அவரவர் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்தும், பின்மாற்றத்திற்குள்ளும் தள்ளப்பட்டனர். **"அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்"** (நியா. 21:25). ஏலியும் வயது சென்றவராய் தன் பிள்ளைகளை வழிநடத்த தவறிப் போனதால், ஜனங்களை வழிநடத்த வேண்டிய அவரின் பிள்ளைகளும் கர்த்தரை அறியவில்லை. தேவனுக்கு விரோதமாக அவர்களின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது. இஸ்ரவேலில் எந்தவொரு தீர்க்கதரிசியும் அதுவரை எழும்பவில்லை.



வழிதப்பிப் போன ஜனங்களைக் குறித்த வேதனையோடு இருந்த கர்த்தரிடத்தில் அன்னாள், **"உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனைப்பண்ணினாள்"** (I சாமு. 1:11). தேவன் அவள் பொருத்தனையை ஏற்றுக் கொண்டு சாமுவேலை கொடுத்தது மட்டுமின்றி, அவரையே

இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் தெரிந்தெடுத்தார்.

அன்னாளும் சாமுவேலும் வாழ்ந்த நாட்களில், சமுதாயத்தில் பெண்களும், சிறுபிள்ளைகளும் மதிக்கப்படாமல் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டும் உதாசீனப்படுத்தப்பட்டும் இருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ஆண்டவர் சாமுவேலைத் தெரிந்து கொண்டு ஏலியிடம், **“நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்”** (I சாமு. 2:35) என்றார்.



கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சாமுவேல், தாண் முதல் பெயர்செபா வரையிலான இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், அவர்களை கர்த்தரின் வழியில் நடத்தவும், ஜனத்திற்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய்யவும் தன்னை அர்ப்பணித்து தேவ திட்டத்தை நிறைவேற்றினார். **“சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்”** (I சாமு. 7:15).

தேவ பக்தி இல்லாமல் தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டிருந்த ஜனங்களை சீர்ப்படுத்த ஆண்டவர் சாமுவேலை தெரிந்து கொண்டது போல, உங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறார். ‘‘நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்...’’ (யோவான் 15:16). பாவத்திலும் சாபத்திலும் சிக்கி தங்களின் வாழ்க்கையைக் கெடுத்து கொண்டு இருக்கும் அநேக ஜனங்களை விடுவிக்கவும், சீர்ப்படுத்தவும் ஆண்டவர் உங்களைத் தெரிந்து கொண்டுள்ளார்.

இந்தியாவின் எழுப்புதலில் ஆண்டவர் உங்களை வல்லமையாக பயன்படுத்த போகிறபடியால், உங்கள் பெலவீனங்களைக் குறித்து சிந்திக்காமல், சாமுவேல் எவ்வாறு தேவனின் இருதயத்தின் பாரத்தை அறிந்து செயல்பட்டாரோ, அதுபோலவே நீங்களும், **“சொல்லும்; அடியேன் கேட்கிறேன்”** (I சாமு. 3:10) என்று தேவனுடைய சத்தத்தைக் கேட்டு செயல்பட ஆரம்பியுங்கள். கர்த்தர் உங்களைக் கொண்டு அநேகரின வாழ்க்கையை சீர்ப்படுத்துவார். **“அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்”** (மத். 20:16). தேவ ஜனங்களை வழிநடத்த அநேகர் அழைக்கப்பட்டு இருக்கலாம்; ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே தேவனுக்கென்று பிரகாசிக்கிறார்கள்.

**எனக்கன்பான வாலிபர்களே, தேவனின் தெரிந்தெடுப்பு எப்போதும் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. உலகம் உங்களை பெலவீனமானவன், பயமுள்ளவன், ஞானம் இல்லாதவன் என்று சொன்னால், நீங்கள் அதற்கு இடம் கொடுக்காதிருங்கள். “உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப் பட்டவைகளையும், இல்லாத வைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்” (I கொரி. 1:28). நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல, உலகத்தை அசைக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்!**



# ஜெபக்கையேடு

ஜெபம்: பெனிட்டா

ஆகஸ்ட் 2024



## போதைக்கு அடிமையாகும் சிறுமிகள்

சிறுமிகள் சிறுவயதிலேயே போதைப் பழக்கத்திற்கு அடிமையாவது குறித்து குழந்தைகள் நல குழும ஆர்வலர் கூறும்போது, "பெரும்பாலும் சந்திக்கும் வழக்குகளில் சிறுமிகளின் குடும்பங்கள் கண்டிப்பாக ஏதோ ஒரு வகையில் பிரிந்திருக்கும் அல்லது அவர்களது பெற்றோர்கள் ஒழுக்கமாக இருக்க மாட்டார்கள். இதுபோன்ற குடும்பங்களில் இருந்து வரும் சிறுமிகள் தான் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர்; எனவே பெற்றோர்கள் தங்களது குடும்பப் பிரச்சனைகளை குழந்தைகளிடம் காண்பிக்காமல் குழந்தைகளை முறையாக கண்காணிக்க வேண்டும். 99% சிறுமிகள் அல்லது சிறுவர்கள் பாதிக்கப்படுவதற்கு அவர்களது குடும்பங்கள் முக்கிய காரணமாக அமைகின்றன. எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்துவது நல்லது. தற்போது சிறுவயதிலேயே, போதை எப்படி இருக்கும் என்பதை அறிய ஆரம்பத்தில் பீர் குடிப்பது, அதன் பின்பு ஆல்கஹால் எடுத்துக் கொள்வது, அதன் பின்பு கஞ்சா புகைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சிறுவர்கள், சமீப காலமாக வலி நிவாரண மாத்திரைகளை வாங்கி அதனை தண்ணீரில் கலந்து ஊசி மூலம் எடுத்துக் கொள்கின்றனர்.

### ஜெபக்குறிப்புகள்

1. போதைக்கு அடிமையாகும் சிறுமிகள் தவறான உறவுகளில் சிக்கி இளம் வயதிலேயே வாழ்க்கையை தொலைக்கும் அவல நிலை மாற ஜெபியுங்கள்.
2. சிறு வயதிலேயே போதை மாத்திரைக்கு அடிமைப்பட்டு இருக்கும் சிறுமிகளை தேவன் தொட்டு அதிலிருந்து மீட்டு எடுக்க ஜெபியுங்கள்.
3. குடும்ப பிரச்சனை, பெற்றோரின் ஒழுக்கமின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுமிகள் அதிலிருந்து வெளிவர ஜெபியுங்கள்.
4. குடும்ப சூழ்நிலையைக் காரணம் காட்டி போதைக்கு அடிமைப்பட்டிருக்கும் சிறுமிகள் மற்றும் சிறுவர்களை தேவன் விடுவிக்க ஜெபியுங்கள்.

## கேபினெட் அமைச்சர்கள்

நாட்டின் 18வது தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களில் வெற்றிபெற்று தொடர்ந்து 3வது முறையாக ஆட்சி அமைத்து இருக்கிறது. திரு. நரேந்திர மோடி அவர்கள் பிரதமராக மீண்டும் பதவி ஏற்றிருக்கிறார். அவருடன் 30 கேபினெட் அமைச்சர்கள், 5 தனி பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்கள், 36 இணை அமைச்சர்கள் என 72 பேர் மத்திய அமைச்சர்களாக பதவியேற்றனர்.



### ஜெபக்குறிப்புகள்

1. இந்திய தேசத்தில் 3வது முறையாக பதவியேற்றிருக்கும் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு தேவன் நல்ல ஞானமும் பாதுகாப்பும் வழங்க ஜெபியுங்கள்.
2. பதவியேற்றிருக்கும் கேபினெட் அமைச்சர்கள் 71 பேர் மீதும் தேவ ஆளுகை உண்டாகவும், சரியான தீர்மானங்கள் எடுக்க நல்ல ஞானத்தை தேவன் கொடுக்கவும் ஜெபியுங்கள்.
3. புதிய ஆட்சி அமைத்திருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சி, இந்தியாவை முன்னேற்ற பாதையில் கொண்டுபோக நல்ல திட்டங்களை அமல்படுத்த ஜெபியுங்கள்.
4. எதிர்க்கட்சி தலைவர் திரு. ராகுல் காந்தி மற்றும் இந்திய கூட்டணி கட்சி தலைவர்கள் மீது தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபியுங்கள்.

## மருத்துவத்துறை

இந்தியாவில் 70,000 மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 37,725 அரசு மருத்துவமனைகள். அது தவிர 10.4 லட்சம் தனியார் கிளினிக்குகள் செயல்பட்டு வருகின்றன. 600க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. 3000 மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்தியாவில் 3ல் 2 மருத்துவர்கள் முறையான மருத்துவப் பட்டம் இல்லாமல் செயல்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சம் வெளிநாட்டினர் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா வருகின்றனர்.



### ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவிலுள்ள அனைத்து மருத்துவமனைகளும், மருத்துவத்தை சேவை மனப்பான்மையோடு செய்ய ஜெபியுங்கள்.
2. இந்திய தேசத்திலிருக்கும் 3000 மருந்து தயாரிக்கும் நிறுவனங்களும் தரமான மற்றும் பக்க விளைவுகளை ஏற்படுத்தாத மருந்துகளை தயாரிக்க ஜெபியுங்கள்.
3. மருத்துவத் துறையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை இல்லாமல், காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவும், சிகிச்சை தடையில்லாமல் நடைபெறவும் ஜெபியுங்கள்.
4. முறையான பட்டம் வாங்காமல், மருத்துவத் துறையில் இருக்கும் போலி மருத்துவர்களை இனங்கண்டுபிடித்து , அப்புறப்படுத்தப்பட ஜெபியுங்கள்.

## சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்

இந்தியாவில் சுமார் 7.7 கோடி பேர் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்க்கரை நோயினால் அதிகம் பாதித்த நாடுகளில் இந்தியா 2ம் இடத்தில் உள்ளது. சர்க்கரை நோயாளிகள் சராசரியாக 10,000 ரூபாய் வரை செலவு செய்கிறார்கள். 2% பேர் சர்க்கரை நோயினால் மரிக்கிறார்கள். உலகளவில் சர்க்கரை நோய் அதிகமாக பாதித்த குழந்தைகள் இருக்கும் நாடுகளில் இந்தியா 2ம் இடத்தில் உள்ளது



### ஜெபக்குறிப்புகள்

1. சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 7.7 கோடி பேர் சுகம் பெற ஜெபியுங்கள்.
2. சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சுகம் பெறவும், இதனால் எந்த பாதிப்புகளும் ஏற்படாதவாறு தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.
3. சர்க்கரை நோயினால் இனிமேலும் மரணங்கள் சம்பவிக்காமல் தடுக்கப்பட ஜெபியுங்கள்.
4. சர்க்கரை நோயினால் பக்க விளைவுகள் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு கர்த்தர் சுகம் கொடுக்கவும், இந்நோய் முற்றிலும் நம் தேசத்தை விட்டு ஒழிக்கப்படவும் ஜெபியுங்கள்.



எழுப்புதலின் செய்தி: ரோசாலி



# எழுப்புதலையும் உபத்திரவத்தையும் பிரிக்க முடியாது!

“ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்...” (மத்தேயு 24:7).







மணிப்பூர் மாநிலத்தில் மெய்தி மற்றும் குக்கி சமூக மக்களுக்கு இடையே கடந்த 2023 ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி வெடித்த கலவரம் இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மணிப்பூர் மக்கள் தொகையில் 51 சதவீதமாக இருப்பவர்கள் மெய்தி இன மக்கள். தலைநகர் இம்பால் சமவெளிப் பகுதிகளில் வசிக்கும் மெய்தி மக்களில் பெரும்பான்மையினர் இந்துக்களாகவும், குறைந்த அளவிலானோர் கிறிஸ்தவர்களாகவும், இஸ்லாமியர்களாகவும் உள்ளனர். அதேசமயத்தில் மலைப்பிரதேசங்களில் வசிக்கும் குக்கி சமூக மக்கள் பழங்குடியினர். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். மெய்தி மக்கள், தங்களுக்கும் பழங்குடியின அந்தஸ்து வேண்டும் என கேட்டு வந்துள்ளனர். அதற்கு குக்கி சமூக மக்கள் தங்களது சலுகைகளும், நிலங்களும், வேலைவாய்ப்பும் பறிபோகும் என்ற அச்சத்தில் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மெய்தி மக்களுக்கு ஆதரவாக மணிப்பூர் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு 2023 ஏப்ரலில் அதன் இணையதளத்தில் வெளியானபோது, குக்கி இன மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், மே மாதம் மெய்தி சமூக மக்களுக்கும், குக்கி சமூகத்தவருக்கும் இடையே மோதல் வெடித்து கலவரமாக மாறி இன்றைக்கு வரைக்கும் அந்த கலவரம் ஓயவில்லை. ஆயுதமேந்திய குழுக்கள் வீடு புகுந்து மக்களைக் கடத்திச் சென்று மாறி மாறி துடிக்கத் துடிக்கக் கொன்றனர். இரத்த சொந்தங்களை இழந்த பல குடும்பங்களின் கூக்குரல்கள் இன்றும் கேட்டுக் கொண்டு இருக்கின்றன.

மெய்தி – குக்கி ஆயுதக் குழுக்களிடையிலான கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். பல ஆயிரம் பேர் சொந்த நாட்டிலேயே அகதிகள் போல் வெளியேறினர். பல குடும்பத் தலைவர்களும், இளைஞர்களும் உயிருக்கு அஞ்சி வேறு இடங்களில் வேதனையுடன் இன்றும் காலம் கழித்து வருகின்றனர்.

மணிப்பூரில் ராணுவமும், துணை ராணுவமும் குவிக்கப்பட்டிருந்தாலும் வன்முறை குறையவில்லை. இந்த வன்முறையில் இதுவரை சுமார் 221 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதனிடையே மணிப்பூர் வன்முறை வெடித்து மே 3ம் தேதியுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், இன்றும் வன்முறைகள் வெடித்துக்கொண்டு தான் இருக்கின்றன.



**''ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்''** என்று 2000 வருடங்களுக்கு முன்பே நமக்கு வேதாகமத்தில் எழுதி வைத்திருக்கிறார். ஜனத்துக்கு விரோதமாய் ஜனம், இன்றைக்கு எழும்பவில்லை. காயீன் ஆபேல் நாட்களிருந்து இருக்கிறது. ''அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது'' என்று வெளி 6:4ல் சொல்லப்பட்டதைப் போல, மணிப்பூர் மாநிலம் தன் சமாதானத்தை இழந்து விட்டது. யார் யாரை கொலை செய்வார்கள், எங்கிருந்து வன்முறை வெடிக்கும் என்று தெரியாமல் ஜனங்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். 'பூமி கொடுமையினால் நிரம்பியிருக்கிறது' என்று ஆதியாகமம் 6:11ல் சொல்கிறபடி ஜனத்துக்கு விரோதமாக ஜனம் எழும்பிக் கொண்டிருக்கிறது.

எகிப்தியர் இஸ்ரவேலருக்கு விரோதமாக எழும்பி, அவர்களை ஒடுக்கினார்கள். அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கி, கொடுமையாய் நடத்தினார்கள். இஸ்ரவேலரில் பிறக்கும் ஆண் பிள்ளைகளை கொன்றும் போட்டார்கள். அப்பொழுது இஸ்ரவேலருடைய உபத்திரவம், கூக்குரல் மற்றும் அவர்களுடைய வேதனைகளை அறிந்து, அவர்களை மீட்க, மோசே என்னும் ஒரு மனிதனை தேவன் அனுப்பினார். மோசேயின் மூலம் ஒரு எழுப்புதல் அந்த நாட்களில் நடந்தது.



அதுபோலவே இன்று மணிப்பூரில் மக்கள் ஒடுக்கப்பட்டு, உபத்திரவம் அடைந்து கொடுமைப்படுத்தப்பட்டு, கொலையும் செய்யப்படுகிறார்கள், மத். 24:12ல் உள்ளபடி, **அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்** என்ற வார்த்தைக்கேற்ப அன்பில்லாத ஒரு சூழ்நிலையே மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

**கர்த்தர் அன்று எவ்வாறு மோசேயின் மூலம் ஒரு எழுப்புதலை கட்டளையிட்டாரோ அதுபோலவே இன்றும் மணிப்பூரில் எழுப்புதலைக் கட்டளையிட மோசேக்கள் எழும்ப வேண்டும். நாம் மணிப்பூரில் எழுப்புதலை பார்க்கப் போகிறோம். வாலிபனே! நீ மணிப்பூரின் எழுப்புதலுக்காக ஜெபிப்பாயா?**


# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## திருவண்ணாமலையில்...

நாள்: **ஆகஸ்ட் 4,** ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 4 மணி முதல்
இரவு 7 மணி வரை

இடம்: புதிய நம்பிக்கை எழுப்புதல் திருச்சபை
தென்றல் நகர், வேங்கிக்கால்,
RELIANCE DIGITAL பின்புறம்

தொடர்புக்கு :
96269 63272, 94428 85315

## மயிலாடுதுறையில்...

நாள்: **ஆகஸ்ட் 18,** ஞாயிற்றுக் கிழமை
நேரம் : மாலை 4 மணி முதல்
7 மணி வரை

இடம்: CJC தேவ ஆலயம்
கீழ பட்டமங்கலம்,

தொடர்புக்கு :
97885 06068, 94428 85315

தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**



சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-7





**Hi friends, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்! 'வீரமுள்ள தீமோத்தேயு' என்னும் இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த தொடர் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளது என்று விசுவாசிக்கிறேன்.**

**இந்த உலகத்தில் எல்லாருமே ஏதாவது ஒரு காரியத்தை செய்யும் பொழுது அந்த காரியத்துல தனக்கு Supportஆ யாராவது இருந்தா நல்லா இருக்குமேன்னு தானே எதிர்பார்ப்போம்?**

ஒரு மாணவனுக்கு நல்ல **Support** பண்ற ஆசிரியர் இருந்தால் அந்த மாணவனால நல்ல மார்க்ஸ் வாங்க முடியும். வேலை செய்யும் இடத்தில் ஒரு **Team Leader**க்கு அவரோட **Team Support** பண்ணினா இன்னும் **effective**ஆக **work** பண்ணி அவங்களுக்கு கொடுக்கப்பட்ட **Target**யை ரொம்ப சீக்கிரமாகவே முடிக்க முடியும். பெற்றோருக்கு நல்ல **Support** பண்ற பிள்ளைங்க இருந்தா அவங்களால நல்ல வேலை செய்யவும் முடியும், அந்த குடும்பமும் முன்னேறும். என்ன திடீர்னு **Support**னு சொல்லிட்டு இருக்கேன்னு பாக்குறீங்களா?

நம்ம பார்த்துக் கொண்டிருக்கிற இந்த தொடரின் கதாநாயகனும் ரொம்ப **Supportive**ஆன நபர் தான். யாருக்கு, எதில் உறுதுணையாக இருந்தார் என்று பார்க்கலாமா?

## வாங்க தொடருக்குள் போகலாம்.

பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்தபடி ரோமர்களுக்கு எழுதிய நிருபத்தில் தீமோத்தேயுவை 'உடன் வேலையாள்' என்று குறிப்பிட்டுள்ளார். பவுல் அப்போஸ்தலன் எருசலேமுக்கு இறுதி முறையாக சென்றபோது தீமோத்தேயுவும் அவருடன் சென்றார். பவுல் முதல் முறையாக ரோமாவில் சிறைப்பட்டிருந்த போது தீமோத்தேயுவும் அவருடன் இருந்தார். பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன் ஆகியோருக்கு பவுல் அப்போஸ்தலன் நிருபங்கள் எழுதும்போதும் தீமோத்தேயு பவுலுக்கு உதவியாக அவருடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமா... பவுல் கலகக்காரர்களை சந்தித்த போதும் தீமோத்தேயு அவருடன் இருந்ததை கடந்த மாத தொடர்களில் பார்த்திருக்கிறோம்.

## தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட நிருபங்கள்:

தீமோத்தேயு எபேசு சபையில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது பவுல் மக்கதோனியாவிலிருந்து தனது நிருபத்தை எழுதுகிறார். இந்த நிரூபத்தில் பவுல் தீமோத்தேயுவை 'விசுவாசத்தின் உத்தம குமாரன்' என்றும், 'குமாரனாகிய தீமோத்தேயு' என்றும் அழைத்து, அவர் மீதுள்ள தமது அன்பை உறுதிப்படுத்தி, அவருக்கு சபை நிர்வாகப் பணியில் நல்ல ஆலோசனைகளை கொடுக்கின்றார். அவரிடம், தான் ஒப்புவித்த சபை நிர்வாக பொறுப்பை காத்துக் கொள்ளும்படி பவுல்

கேட்டுக் கொள்கின்றார். பவுல் அப்போஸ்தலன் இரண்டாவது முறை ரோமாபுரியில் சிறையில் அடைக்கப்பட்டபோது அவர் தமது இரண்டாவது நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதினார். அதில் தீமோத்தேயுவை தன்னிடம் வரும்படி அழைத்தார்.



தனக்கு பின்பு தனது பணியை தீமோத்தேயு சிறப்பாக செய்து முடிப்பார் என்று, அவர் மீது பவுல் வைத்திருந்த நம்பிக்கையை, இரண்டாம் நிருபத்தில் நாம் தெளிவாக பார்க்கலாம். ('உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்' 2 தீமோத்தேயு 1:14) என்று அவருக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தை காத்துக் கொள்ளும்படி பவுல் அறிவுரை கொடுக்கின்றார்.

பவுல் மரண தருவாயில் இருந்த போதும் பிகெல்லு, எர்மொகெனே, தேமா மற்றும் அலெக்சாண்டரால் கைவிடப்பட்டபொழுதும் அவர் தீமோத்தேயுவின் மீது வைத்திருந்த அதிக அன்பும், நம்பிக்கையும் இளைஞனாகிய தீமோத்தேயுவிற்கு இன்னும் அதிக உத்வேகத்தை கொடுத்திருக்கும் அல்லவா? இவர் இறுதிவரை பவுலுக்கு ஊன்றுகோலாக இருந்திருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

**பாருங்க friends! நம்ம தீமோத்தேயு பவுலின் ஒவ்வொரு சுகத்திலும், சுகவீனத்திலும், உயர்விலும், தாழ்விலும், போராட்டங்களிலும், பிரச்சனைகளிலும் கூடவே இருந்திருக்கிறார். பவுலுடன் மற்ற ஊழியர்களும் இருந்தனர்; ஆனால் அவர்களில் ஒரு சிலர் பிரச்சனைகளையும் போராட்டங்களையும் கண்டு பவுலை விட்டு பிரிந்து சென்றனர். இறுதிவரை எல்லா சூழ்நிலைகளிலும் தீமோத்தேயு பவுலுக்கு உறுதுணையாக இருந்ததால்தான், தனக்கு பின்பு இந்த ஊழியத்தை அவர் நன்றாக கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கை பவுலுக்கு இருந்தது. நாமும் இந்த கடைசி காலத்தில் எழுப்புதலுக்காக பிரயாசப்படுகிற, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற ஊழியர்களுடன் இணைந்து உறுதுணையாய் தேவ சித்தம் நிறைவேற செயல்படுவோம்.**

- வீர சகாப்தம் தொடரும்...



எச்சரிப்பின் செய்தி: டேவிட்

# நிச்சய நரகம்!

பகுதி - 7

**Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போக பிசாசு வைக்கும் பொறிகள் தான் பாவம். அதில் ஒரு பொறியாகிய உதாசீனத்தைக் குறித்து கடந்த மாதம் தெளிவாக அறிந்து கொண்டோம். இந்த மாதம், சாத்தான் கையாளும் வேறொரு பொறியாகிய இடறலைக் குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.**

## இடறல்

ஒருவர் போக வேண்டிய இடத்துக்கு போகக் கூடாதபடி பாதையில் வருகிற தடைகளை இடறல்கள் என்று பொதுவாக சொல்வார்கள். ஆனால், வேதத்தின்படி, ஒருவனுடைய பார்வை, பேச்சு, நடக்கை, செயல்கள் மற்றவர்களை பாவம் செய்ய தூண்டுவதாக இருந்தால் அது இடறல் எனப்படும். அப்படி செய்கிறவர்களை இடறல் உண்டாக்குகிறவர்கள் என்று வேதம் சொல்கிறது.



இன்னும் சொல்லப்போனால், பரலோகம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறவர்களை நம் நடக்கைகள், செயல்கள் மூலம் பாவம் செய்ய தூண்டி அவர்களை பரலோகம் செல்ல விடாமல் தடுப்பது. முதலில் இடறல் ஒரு பாவம் என்பதை உணர வேண்டும். 'அக்கிரமமாகிய இடறல்' என்று வேதம் சொல்கிறது. (எசே. 14:3,4,7).

இடறல்கள் மிகவும் ஆபத்தானவை, ஏனென்றால் அது மற்றவர்களை பாவத்தில் விழச் செய்யும்.'' இந்த இடறல் என்கிற பாவத்தை அநேகர் தெரிந்தும், தெரியாமலும் செய்கிறார்கள்.

- துப்பட்டா அணியாமல் பொது இடத்திற்கு வரும் பெண்களால் ஆண்களுக்கு இடறல்.

- லஞ்சம் வாங்காத உண்மையான அரசு அதிகாரிக்கு தன் காரியம் நடப்பதற்கு லஞ்சம் கொடுப்பவர்களால் இடறல்.

- மதுபான பழக்கமில்லாத ஒருவருக்கு மதுபானத்தை குடிக்க கொடுக்கும் நண்பர்களால் இடறல்.

- மொபைல் பயன்படுத்தும் போது வருகிற தேவையற்ற ஆபாசமான விளம்பரத்தினால் இடறல்.

இப்படி அநேக காரியங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

பாருங்கள், இயேசு தம்முடைய சிலுவைப் பாடுகளைக் குறித்து சீஷர்களிடம் முன் அறிவித்த போது, பேதுரு இயேசுவிடம் ''உமக்கு இப்படி நடக்கக் கூடாது, இனிமே இப்படி பேசக்கூடாது'' என்று கடிந்து கொண்டபோது, இயேசு பேதுருவைப் பார்த்து, ''நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்'' என்றார். இயேசு பாடுபட்டு மரித்து உயிரோடு எழும்ப வேண்டும் என்பது தேவ சித்தம். ஆனால் பேதுரு தேவ சித்தம் நிறைவேற இடறலாயிருந்தான் (மத். 16:29-33).

நாம் ஒருநாளும் மற்றவர்களுக்கு இடறலாயிருக்கக் கூடாது என்று இயேசு கற்றுக் கொடுத்தார். பாருங்கள், இயேசு வாழ்ந்த காலத்தில், ரோமர்கள் ஆட்சி செய்ததால், அந்நியர்கள் மட்டுமல்லாது யூதர்களும் வரிசெலுத்த வேண்டிய நிர்பந்தம் இருந்தது. ஆனால் உண்மையில் இஸ்ரேல் நாட்டு பிரஜைகள் வரி செலுத்த அவசியமில்லை. இயேசுவும் யூதரானதால் வரிசெலுத்த வேண்டிய

அவசியமில்லை. ஆனால் மற்றவர்களுக்கு இடறலாய் இருக்கக் கூடாது என்று இயேசு வரி செலுத்தினார் (மத். 17:24-27).

## வேதம் சொல்லும் ஆலோசனை:

1. நாம் வாழும் சமுதாயத்திற்கும் (நம்மை சுற்றியுள்ளவர்கள்), சபைக்கும் (விசுவாசிகள்) இடறலற்றவர்களாயிருக்க வேண்டும் (1 கொரி. 10:33).

2. உணவில் கூட மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்கக்கூடாது (ரோமர் 14:20).

3. இடறல் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (ரோமர் 16:17).

## இடறல் உண்டாக்குகிறவர்களுக்கு வரும் தண்டனை:

எந்த மனிதனால் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ! என்று வேதம் சொல்கிறது. ஐயோ என்ற வார்த்தை சாபத்தைக் குறிக்கும். இடறல் உண்டாக்கினால் முதலில் சாபம் வரும், பிறகு மரணம் வரும். பாருங்கள், இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரத்தில் பிரயாணம் பண்ணும் போது, அவர்கள் விக்கிரகத்துக்கு படைக்கப்பட்டதை புசிக்கவும், வேசித்தனம் பண்ணவும் அவர்களை பாவம் செய்ய வைக்க இடறலுண்டாக்கின பிலேயாம் பட்டயத்தினால் மடிந்து போனான் (வெளி. 2:14; எண். 31:8). இந்த இடறல் என்கிற பாவம் நாம் வாழும் போது மட்டும் நமக்கு பாதிப்பைக் கொண்டு வராமல், நாம் மரித்த பிறகு நம் ஆத்துமாவை நரகத்திற்கு கொண்டு செல்ல வல்லமையுள்ளது.

**“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.” (மத்தேயு 18:6)**

நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிற இந்த நவீன உலகில், வாலிபர்களாகிய நாம் fashion, trend என்ற பெயரில் மற்றவர்களுக்கு இடறலாயிருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். low-hip pants அணிதல், அரைகுறை மற்றும் tight ஆன உடைகளை அணிதல், tattoo குத்திக்கொள்வது, சினிமா பாடல்கள் கேட்பது பாடுவது மட்டுமல்லாமல், துணிகரமாக அதை whatsappல் status போடுவது, instaவில் reels நடிப்பது, theatre சென்று படம் பார்ப்பது, churchக்கு தாமதமாக வருவது, ஆராதனை நேரத்தில் mobile phone உபயோகிப்பது போன்ற காரியங்களை செய்வதன் மூலம், ‘‘இவர்களே இப்படி நடந்து கொள்ளும் போது நான் செய்தால் என்ன தவறு’’ என்று அநேக நேரங்களில் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களையும், விசுவாசத்தில் உறுதியாய் இருப்பவர்களையும் கூட இடறிப்போக நாம் பெரிதும் வழிவகுக்கிறோம். அதுமட்டுமல்ல, புறஜாதி மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு அநேக காரணங்கள் இருந்தாலும், அதில் முக்கியமான காரணம் கிறிஸ்தவர்களும் அவர்களின் சாட்சியற்ற வாழ்க்கையுமே.



**இதை வாசிக்கிற வாலிப சகோதரனே, சகோதரியே, ஒருவேளை இத்தனை நாட்கள் நீ வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் மற்றவர்கள் இடறிப்போக ஏதோவொரு வகையில் நீ காரணமாயிருந்திருப்பாயானால் ‘இனிமேல் என் செயல்கள், நடக்கைகள் மூலம் மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்காமல் இருப்பேன்’ என்று இன்று தீர்மானம் செய்யுங்கள் (ரோமர் 14:13). பிசாசானவன் “இடறல்” என்கிற பாவத்தை செய்ய வைத்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போக தீவிரமாக செயல்படுகிறான். எனவே இந்த எச்சரிப்பை உணர்ந்து, இந்த பாவத்தின் மூலம் வருகிற நரக தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளுங்கள்.**

**Okay Friends,** அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான வேறொரு பாவத்தைக் குறித்து நாம் தெரிந்துக் கொள்ளலாம்.

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (4th Aug)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (10th Aug)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church, Nearby MGM Plaza, [Theekadir Busstop] 41, K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (11th Aug)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto 1st floor, 163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre, HOREB Complex, 1st Floor, P K N Road, (Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SUNDAY (18th Aug)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
# 5, Gandhi Irwin Road,
Egmore, (Opp. Railway Station)
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (24th Aug)

**PERAMBALUR**
**(5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (25th Aug)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD**
**(4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON THE LAST SUNDAY OF EVERY MONTH

சாதனை: சுமா

# தங்க மங்கை



**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! நாம் வாழ்வில் வெற்றி அடைய, குறிக்கோள் என்பது மிக முக்கியமான ஒன்று. குறிக்கோள் இல்லாமல் நாம் ஓடுவோம் என்றால் வெற்றி அடைய முடியாது. வெற்றி அடைய முதலாவது நமது குறிக்கோள் மிக துல்லியமாக இருக்க வேண்டும். இதுதான் வெற்றிக்கு நேராக நம்மை வழிநடத்தும். தன்னுடைய குறிக்கோளை மிக நேர்த்தியாக கண்டறிந்து வெற்றிப் பெற்ற சாதனையாளரின் வாழ்க்கைப் பயணம் உங்கள் முன்...**


1964ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27ம் தேதி கேரளா மாநிலத்தில் பிறந்தவர் பி.டி. உஷா. சிறு வயதில் இருந்தே விளையாட்டில் மிகுந்த ஆர்வம் இவருக்கு இருந்தது. தடகள விளையாட்டில் இவருடைய திறமை மிகச் சிறந்து விளங்கியது. 13ம் வயதில் தன்னுடைய திறமையை அனைவரும் அறிய வெளிக்கொண்டு வந்தார். தேசிய அளவிலான தடகள விளையாட்டில் 100 மீட்டர் ஓட்டத்தில் கலந்து கொண்டு, தேசிய சாதனை படைத்தார். இதைத் தொடர்ந்து தன்னுடைய திறமையை வளர்த்துக் கொண்டு, அநேக போட்டிகளில் பங்குகொண்டு பல பதக்கங்களை தன் வசமாக்கிக் கொண்டார். 20 ஆண்டுகளாகத் தடகளப் போட்டிகளில் பங்கேற்று, பல சாதனைகளைப் படைத்தார். இதை கௌரவிக்கும் வகையில் இந்திய அரசு பத்மஸ்ரீ மற்றும் அர்ஜுனா விருதுகளை இவருக்கு வழங்கியது. 1984, 1985, 1986, 1987 மற்றும் 1989ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த பெண் தடகள வீராங்கனைக்கான ஆசியா விருதைப் பெற்றார். இன்று இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக இருந்து பல தடகள வீரர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.





**இதை வாசிக்கும் வாலிபர்களே, நம்முடைய வாழ்வில் குறிக்கோள் மிக மிக முக்கியம். அதை சரியாக நீங்கள் தேர்ந்தெடுத்து அதில் உங்கள் கவனம் முழுவதையும் செலுத்துவீர்களானால், கண்டிப்பாக வெற்றி அடைவீர்கள். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள், நாளை நீங்களும் அநேகருக்கு வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் இருப்பீர்கள்.**

Source: Internet




# நண்பர்கள் தினம்

## 2024 August 04

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையை நண்பர்கள் தினமாக கொண்டாடுகிறோம். இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி நண்பர்கள் தினமாக அனுசரிக்க இருக்கிறோம்.

**நம்முடன் நன்றாகப் பேசுபவர்கள் சிறந்த நண்பர்கள் அல்ல; நம் வாழ்க்கையினை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்பவர்களே நல்ல நண்பர்கள்.**

### நண்பர்கள் தினத்தை எவ்வாறு கொண்டாடுவது?

- நண்பர்களுடன் ஒரு சிறப்பு சுற்றுலா செல்ல திட்டமிடலாம்.
- உங்கள் நண்பரின் முகத்தில் சந்தோஷத்தைக் கொண்டு வரும் ஒரு அற்புதமான பரிசைக் கொடுத்து மகிழலாம்.
- மனம்விட்டு பேசுவது அல்லது ஏதாவது இயற்கையை ரசிப்பது என அன்று ஒரு நாள் உங்கள் நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள்.

### என்னென்ன பரிசு பொருட்கள் கொடுப்பது?

- சாக்லேட்டுகள் பிடிக்குமென்றால் நண்பர்கள் மீதான உங்கள் பாசத்தை வெளிப்படுத்த நீங்களே உங்கள் கைகளால் சாக்லேட்டுகள் தயாரித்து பரிசாக அளிக்கலாம்.
- எப்போதும் உங்கள் நண்பருடன் இருக்கிறீர்கள் என்பதை தெரிவிக்கும் வகையில் அவர்கள் பெயர் அல்லது initial போட்ட பிரெண்ட்ஷிப் டே மக் (Friendship day Mug) பரிசளிக்கலாம்.
- உங்கள் நண்பர் குழு அல்லது நண்பருக்கு, பிடித்த கேக் வகைகளை ஆர்டர் செய்து அதில் நட்பின் மகத்துவத்தை குறிக்கும் வாக்கியங்களை எழுதி, எல்லோரும் ஒன்றிணைந்து கட் செய்து, நண்பர்கள் தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம்.
- நண்பர்கள் தினத்திற்கு வெறும் வார்த்தைகளால் சொல்லும் வாழ்த்துக்களை விட, காம்போ கிஃப்ட்ஸ் (பரிசு தொகுப்புகள்) உங்கள் நண்பருக்கு பரிசளிப்பது அவர்களை மிகவும் உற்சாகப்படுத்தும்.
- நண்பர்கள் தினத்தில் உங்கள் பெண் நண்பர்களுக்கு பிரெண்ட்ஷிப் நெக் டாலர்கள் பரிசளிக்கலாம். இது பெண் நண்பர்களுக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கும்.
- நண்பர்களுக்கு பிடித்த உணவு பதார்த்தங்களை வாங்கி கொடுத்து ட்ரீட் வைத்து அசத்தலாம்.

**நண்பர்களே! உலகப்பிரகாரமாக உங்களுக்கு எத்தனை நண்பர்கள் இருந்தாலும், உங்களுக்கு கிடைக்க வேண்டிய மிகச் சிறந்த நண்பர் இயேசுவே! இயேசுவைவிட உங்களுக்கு மிகச் சிறந்த நண்பர்கள் இருக்கவே முடியாது.**

**"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13)**

தகவல்: வயலா

# NISUIN BERIYTH

## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 7





**கடந்த மாதங்களில் தேவ சித்தத்தை தடுக்க முயலும் தடைக்கற்கள் குறித்து தியானித்தோம். இந்த இதழிலும் உங்கள் திருமணத்திற்கு தேவையான சிறந்த ஆலோசகர்கள் குறித்து தியானிக்க இருக்கிறோம்.**

ஒருவேளை இரண்டு அல்லது மூன்று வரன்கள் ஒரே சமயத்தில் வரும்போது, அனைத்துமே உங்களுக்கு ஏற்றதாக இருப்பதாக தோன்றலாம். ஆனால் சிறந்த ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும்! என்ன செய்வது? யாரிடம் ஆலோசனை கேட்பது என்ற குழப்பம் உங்கள் மனதில் இருக்கலாம்.

மனிதர்களிடம் சென்று ஆலோசனை கேட்காமல், உங்களை சிருஷ்டித்த தேவனிடம் சென்று ஆலோசனைக் கேளுங்கள். அவருக்கே 'ஆலோசனை கர்த்தர்' என்ற பெயர் உண்டு (ஏசாயா 9:6). உங்களுக்காக ஒரு நாளை பரிசுத்த உபவாச நாளாக நியமியுங்கள். உங்கள் அறைக் கதவைப் பூட்டி உங்கள் காரியங்களை எல்லாம் இயேசு கிறிஸ்துவிடம் சொல்லுங்கள். சரியான வாழ்க்கைத் துணையை தேர்வு செய்ய அவரே உதவி செய்யுமாறு அவர் சமூகத்தில் மன்றாடுங்கள். அவர் தான் உங்களை சிருஷ்டித்தவர். உங்கள் சரீரத்தில் இருந்து விலா எலும்பை எடுத்து எந்த பெண்ணை சிருஷ்டித்தாரோ, அல்லது யாரிடம் எடுத்த விலா எலும்பினால் உங்களை சிருஷ்டித்தாரோ, சரியாக பொருத்தம் செய்ய அவர் ஒருவராலே தான் கூடும். திருமணத்தை எதிர் நோக்கியிருக்கும் வாலிப பிள்ளைகள் முதலாவது சிருஷ்டி கர்த்தரிடம் ஆலோசனைக் கேட்க வேண்டும். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று அவரை விசுவாசிக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் வாழ்வில் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று செழிப்பாக, சந்தோஷமாக வாழ வேண்டும் என்று முதலாவதாக விரும்புகின்றவர் தேவனே. அவருக்கு அடுத்தபடியாக உங்கள் சுகவாழ்வை மிகவும் விரும்புகின்றவர்கள் உங்கள் பெற்றோரே. உங்கள் நல்வாழ்வுக்காக அதிகப்படியான தியாகத்தை செய்தவர்களும் அவர்களே.

### பலவித வலியையும், வேதனையையும் சகித்து உங்களைப் பெற்றெடுத்த தாய்:

- பிடித்த உணவை சமைப்பதிலும் அந்த உணவை சாப்பிட வைக்க, பல இடங்களுக்கு சுமந்து சென்று வேடிக்கைக்காட்டி ஊட்டி மகிழ்ந்த தாயின் செய்கை.
- தூங்க வைப்பதற்கு மணிக்கணக்காக நின்று தொட்டில் ஆட்டிய செய்கை.
- சுகவீன நேரத்தில் தூக்கத்தை தியாகம் செய்து இரவெல்லாம் கண்விழித்து பார்த்த செய்கை.



## குடும்பத்தின் வருமானத்திற்கு இரவு–பகல் பாராமல் சம்பாதித்த தகப்பன்:

- பிடித்த உணவு, பிடித்த உடை, பிடித்த விளையாட்டுப் பொருட்கள் என கேட்டதையெல்லாம் வாங்கித் தந்து மகிழ்வித்த தந்தையின் செய்கை.
- ஒவ்வொரு தருப்பூசியையும் தவறாமல் செலுத்த வேண்டிய நாளில் ஞாபகமாக செலுத்திய செய்கை.
- மட்டுமல்ல, ஊரிலேயே சிறந்த பள்ளிக் கூடம், சிறந்த டியூசன் சென்டர், சிறந்தக் கல்லூரி என்று தேடித் தேடித் தெரிந்தெடுத்து, பணத்தை பணம் என்று பாராமல் கல்விக்காக செலவழித்த செய்கை.



இத்தனை வசதிகளைப் பார்த்துப் பார்த்து செய்து தந்த பெற்றோர், வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் போதும் ''மிகச் சிறந்ததையே'' தெரிந்தெடுப்பார்கள் என்று பிள்ளைகள் பெற்றோரை நம்ப வேண்டும்.

இன்று வாலிப வயதை அடைந்தவுடன், அநேக பிள்ளைகள் பெற்றோரை மதிப்பதில்லை. ''என் வாழ்க்கை, வாழப்போவது நான், உங்களுக்கென்ன?'' என்று குடும்பத்திற்கே ஆகாத, நல்ல குணமோ, ஏற்ற படிப்போ, நல்ல வேலையோ எதுவுமே இல்லாத நபர்களை, முகத்தை மட்டும் பார்த்து திருமணம் செய்கின்றனர். பின்னர் ஒரு சில மாதங்களில் விவாகரத்து என்ற பெயரில் தங்கள் வாழ்வையும் தொலைத்து, குடும்பத்தின் நிம்மதியையும் கெடுத்து விடுகின்றனர். உங்கள் பெற்றோரிடம் மனம் விட்டு பேசுங்கள். உங்கள் விரும்பத்தையும், எதிர்பார்ப்புகளையும் அவர்களிடம் பகிர்ந்துக் கொள்ளுங்கள். முன்பே உங்கள் நல்வாழ்வை விரும்பி உங்கள் நன்மைக்காக உழைத்தவர்கள், கண்டிப்பாக வாழ்க்கைத் துணையை தேர்வு செய்வதிலும் பலரிடம் கலந்து ஆலோசித்து 'மிகச் சிறந்ததையே' தெரிந்தெடுப்பார்கள். **உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. நீங்கள் உங்கள் பெற்றோரை மதித்து அவர்களை கலந்து ஆலோசித்து அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் போது, உங்கள் பரம பிதாவும் உங்கள் செய்கைகளில் மகிழ்ந்து உங்களை ஆசீர்வதிப்பார்.



பரிசுத்த வேதாகமத்தில், தாவீது என்னும் அரசன் தனது 40 வருட ஆட்சிக் காலத்தில் சந்தித்த எல்லா போர்களிலும் வெற்றியே பெறுகிறார். ஏனென்றால் போருக்கு போகலாமா? வேண்டாமா? எப்படி போக வேண்டும்? எப்பொழுது புறப்பட வேண்டும்? என்று ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தரிடம் கேட்டு ஆலோசனைப் பெற்று, பின் செய்கிறார்; அதினால் எல்லாவற்றிலும் ஜெயம் பெறுகிறார்.

ஆனால் 'சவுல் ராஜாவின் மருமகனாவது தேவ சித்தமா?' என்று அவர் தேவனிடம் ஆலோசனைக் கேட்கவில்லை. மீகாளை தனது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளலாமா என்று தேவனிடம் விசாரிக்கவில்லை. பெற்றோரிடமும் கலந்து ஆலோசிக்கவில்லை. தாவீது ராஜாவின் அரண்மனை வாழ்வில் உடனிருக்க விரும்பிய மீகாள், சவுலுக்கு பயந்து அரண்மனையை விட்டு ஓடும் சூழ்நிலையில் தாவீதுடன் பயணிக்கவில்லை. மீகாள், தாவீது ராஜாவின் முதல் மனைவியாக தன்னுடைய ஸ்தானத்தில் சரியாக இருந்திருந்தால், ஒருவேளை தாவீதுக்கு பல மனைவிமார்கள் வரும் சூழ்நிலை இல்லாமல் இருந்திருக்கும். அநேக பிள்ளைகளால் அவர்பட்ட பாடுகள், சந்தித்த அவமானங்கள், கடந்து சென்ற கடினமான பாதைகள் ஒருவேளை இருந்திருக்காது. இஸ்ரவேல் மக்களுக்கு திறம்பட நல்லாட்சி புரிந்த ஒரு சிறந்த அரசனால், இல்லறம் இனிதாக அமைத்திட இயலவில்லையே... ஏன்?... சிந்திப்பீர்!

(தொடரும்)

# செய்திகள்!

## சர்வதேச அளவில் 4-ல் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு



அன்றாடம் சத்தான உணவு வகைகள் கிடைக்காத குழந்தைகளின் நிலையை 'குழந்தை உணவு வறுமை' என்று யுனிசெப் மற்றும் உலக சுகாதார அமைப்பு இணைந்து வரையறுத்துள்ளன. இந்நிலையில், குழந்தை உணவு வறுமையால் தெற்காசிய நாடுகள் மற்றும் துணை சஹாரா ஆப்பிரிக்க பிராந்தியங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் 18 கோடியே 10 லட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து போதாமையால் அவர்களது உயரம், உடல் உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த 18.1 கோடி பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 65 சதவீதத்தினர் இந்தியா, கினியா, ஆப்கானிஸ்தான், புர்க்கினா பாசோ, எத்தியோப்பியா உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்தவர்கள். தெற்காசிய நாடுகளில் மட்டும் 6 கோடியே 40 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து மிக்க உணவு இன்றி வாடிக் கொண்டிருக்கின்றனர். அந்த பட்டியலில் சோமாலியா நாடு முதலிடத்தில் உள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்கு பிந்தைய காலத்தில் பொருளாதார சிக்கல்களில் இருந்து ஓரளவு மீண்டாலும் உணவு பண்டங்கள் உட்பட அனைத்து விதமான பொருட்களின் விலைவாசியும் அதிகரித்திருப்பதே அவலநிலைக்கான காரணம் என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

– 22 ஜூன், 2024, இந்து தமிழ் திசை.

## கடும் வெப்ப அலையினால் 62 கோடி பேர் இந்தியாவில் பாதிப்பு



அமெரிக்காவின் பருவநிலை மத்திய ஆய்வுக் கூடத்தின் விஞ்ஞானிகள் குழு நேற்று வெளியிட்ட அறிக்கை: "இந்த ஜூன் மாதம் சுட்டெரித்த வெயிலின் காரணமாக இந்தியாவில் 61.9 கோடி, சீனாவில் 57.9 கோடி, இந்தோனேசியாவில் 23.1 கோடி, நைஜீரியாவில் 20.6 கோடி, பிரேசில் நாட்டில் 17.6 கோடி, வங்கதேசத்தில் 17.1 கோடி, அமெரிக்காவில் 16.5 கோடி, ஐரோப்பிய நாடுகளில் 15.2 கோடி, மெக்சிகோவில் 12.3 கோடி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக மக்கள் தொகையில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஜூன் 16-லிருந்து 24 வரையிலான நாட்களில் அதிக வெப்பத்தின் தாக்கத்தை அனுபவித்துள்ளனர்." இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

– 30 ஜூன், 2024, இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

தகவல்: காட்வின்

TECH - 7

# கைபேசியை கையாளு!

வணக்கம் நண்பர்களே! வேகமாக வளர்ந்து வரும் இந்த Technology உலகில், நாம் புதிதாக அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ள வேண்டிய சூழல் உண்டாகிறது. இந்த 'கைபேசியை கையாளு' கட்டுரையின் மூலம் இதுவரை Cloud storage குறித்த சில காரியங்களைக் கற்றுக் கொண்டீர்கள். அது உங்களின் பள்ளி, கல்லூரி மற்றும் வேலை பார்க்கும் இடங்களுக்கு எப்படி உதவும் என்பதையும் கற்றுக் கொண்டீர்கள். அதை தவிர்த்து பொது இடங்களில், அரசு அங்கீகரிக்க கூடிய இடங்களில் Cloud storage எப்படி உதவும் என நீங்கள் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறீர்களா? எடுத்துக்காட்டாக இரயில் பயணத்தின் போது original ID proof கொண்டு செல்ல மறந்து அதற்கு அபராதம் கட்டி., 'ச்ச... இது Phoneல காண்பிப்பது போல் இருந்தால் நல்லா இருக்குமே' என யோசித்தது உண்டா? அப்படி என்றால் உங்களுக்கானது தான் DigiLocker என்னும் கைப்பேசி செயலி. இதைக் குறித்த பயனுள்ள தகவல்தான் இந்த கட்டுரையில் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்.




DigiLocker என்பது டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட கைபேசி செயலி ஆகும். இந்த டிஜிட்டல் லாக்கரில் ஆவணங்களைச் சேமித்து வைக்கவும், தேவைப்படும் போது அதை பயன்படுத்தவும், சரிபார்க்கவும் முடியும். டிஜிலாக்கரில் முக்கியமான ஆவணங்களான பான் கார்டு, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, பள்ளி மதிப்பெண் சான்றுகள், இன்சூரன்ஸ் பாலிசி ஆவணங்கள் என அனைத்தையும் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பாக வைக்க முடியும்.

இதனால் ஆவணங்களை எப்போதும் கையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவைப்படும் நேரத்தில் டிஜிலாக்கரில் இருந்து எடுத்து பயன்படுத்தி கொள்ள முடியும். அதாவது டிஜிலாக்கர் வாலட்டில் சேமிக்கப்பட்டுள்ள உங்களின் ஓட்டுனர் உரிமத்தை டிராஃபிக் போலீசார் கேட்கும் சமயங்களில் காண்பிக்க முடியும். அனைத்து ஆவணங்களையும் ஒரே இடத்தில் பாதுகாப்பாக வைத்து கொள்ள முடியும். இயற்கை பேரிடர் சமயங்களில் முக்கிய ஆவணங்களை இழக்க நேரிடும் போது இந்த டிஜிலாக்கர் வசதி கைக்கொடுக்கும்.

**சரி இந்த டிஜி லாக்கரை எப்படி பயன்படுத்துவது என கேட்கின்றீர்களா?**

www.digilocker.gov.in/ என்ற இணையதளத்தில் உங்கள் மொபைல் எண் மற்றும் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி DigiLocker walletக்கு விண்ணப்பிக்கலாம். அல்லது ஆண்ட்ராய்ட் / ஐ போன் கைபேசிகளிலும் play store / App Store மூலம் இதை Download செய்து Register செய்து கொள்ளலாம். ஆதாருடன் பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் உங்களிடம் இல்லையென்றால், அருகிலுள்ள நிரந்தர ஆதார் பதிவு மையத்தில் அதைப் புதுப்பித்து அதன் பிறகு டிஜிலாக்கருக்கு விண்ணப்பிக்கலாம்.

அதில் கேட்கப்படும் விவரங்களைப் பூர்த்தி செய்த பிறகு, நீங்கள் Security Pin உருவாக்கி, உங்கள் மின்னஞ்சல் ஐடியை உள்ளிட வேண்டும். இந்த செயல்முறை முடிந்ததும், நீங்கள் ஒரு Login ID மற்றும் Password-ஐ உருவாக்க வேண்டும். அதன் பிறகு தேவையான நேரத்தில் டிஜிட்டல் லாக்கரை பயன்படுத்த முடியும்.

**Okay friends, இம்மாத tech info உங்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும் என்று நம்புகிறேன். மீண்டும் அடுத்த மாதம் மற்றுமொரு infoவுடன் உங்களை சந்திக்கிறேன். Bye!**

**Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847**
**Postal Registration No: TTN/26/2023-2025.**
**Date of Publication: 25 – 07 -2024**
**Date of Posting: 28th to 30th of every month.**
**Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.**
**Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை 2024



வாலிபர்கள் எழுப்புதலில் பயன்படுத்தப்பட கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கும்மிடிப்பூண்டி, ஆனைமலை, பல்லடம், திருப்பதி, உடுமலைப்பேட்டை, விளாத்திகுளம், ஆந்திரா மாநிலம்–குப்பம், திருநெல்வேலி மற்றும் ஜெபமலையில் வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் சகோ. சாம் ஜெபராஜ், சகோ. அவினாஷ், சகோ. சதீஷ் குமார் அவர்கள் தேவசெய்தி கொடுத்து, வந்திருந்த வாலிபர்களை அபிஷேகத்தில் நடத்தினர். இதில் சுமார் **2600க்கும் அதிகமான வாலிபர்கள்** கலந்துகொண்டனர். அநேகர் புதிய அபிஷேகத்தைப் பெற்று புதுபெலனோடு தங்கள் தாலூக்காக்களில், கிராமங்களில் சுவிசேஷம் அறிவிப்போம் என்று **74,400 கைப்பிரதிகளை** வாங்கி சென்றனர். தேவனுக்கே மகிமை!









